Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்று நான்காவது நாளாக
திருமறைக் கலா மன்றம்
தயாரித்து வழங்கும்
காவிய நாயகன்
(திருப்பாடுகளின் காட்சி)
மார்ச் 30,31, ஏப்ரல் 1,3,4, - 2004
(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் - மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் (சி-2335) - திருமறைக் கலா மன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 12 (03.04.2004) சனிக்கிழமை இதழ்:185

### தமிழ்த்தேசியத்தின் ஒருமைப்பாட்டை உறுதிசெய்துள்ள வடபகுதி மக்கள்

# யாழ்ப்பாணத்தில் 9 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சியே கைப்பற்றக் கூடும்!

## எட்டு ஆசனங்கள் கிடைப்பது உறுதி

(யாழ்ப்பாணம்)

**பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்காக நேற்று நடத்தப்பட்ட தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 80 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்று தமிழரசுக்கட்சி எட்டு - அல்லது மொத்தமுள்ள ஒன்பது ஆசனங்களையும் கைப் பற்றக்கூடியளவுக்கு முன்னணியில் இருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.**

நேற்று இடம்பெற்ற தேர்தலில் 2 லட்சத்து 80 ஆயிரத்து 435 பேர் யாழ்ப் பாணத் தேர்தல் மாவட்டத்தில் தமது வாக்கு களைப் பதிவுசெய்திருந்தனர்.

இந்த வாக்குகளை எண்ணும்பணி நேற்றி ரவு ஆரம்பிக்கப்பட்டது. 22 மேசைகளில் இரண்டு சுற்றுக்களாக பதினொரு தேர்தல் தொகுதி வாக்குகளும் எண்ணப்பட்டன.

தபால் வாக்குகள் முதலில் எண்ணப்பட்ட போது - தமிழரசுக் கட்சி 80.46 வீத வாக் குகளைப்பெற்று முன்னணியில் இருந்தது. ஈ.பி. டி.பி 10.64 வீத வாக்குளையும், சுயேட் சைக்குழு 1 8.6 வீத வாக்குகளையும் மட் டுமே பெற்றிருந்தன.

முதலாவது சுற்று வாக்கு எண்ணும்பணி முடி வுற்ற நிலையில் அனைத்து தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சி அதிகளவான வாக்குகளைப் பெற்றிருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டிலும் அமைதியான தேர்தல்!

யாழ்.மாவட்டத்தில் நேற்றைய தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் வாக் காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்துவ தற்காக வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென் றிருந்தனர்.

வழமையைவிடவும் வீதிகளிலும், வாக்க ளிப்பு நிலையங்களைச் சூழவும் பெருமள வான படையினரும், பொலிஸாரும் குவிக்கப் பட்டிருந்தனர்.

வாக்களிப்பு நிலையங்களில் சுமாரான வாக்களிப்பு இடம்பெற்றிருந்த அதேவேளை, கிளிநொச்சிப்பகுதி வாக்காளர்களுக்காக அமைக்கப்பட்ட முகமாலை கொத்தணி வாக் களிப்பு நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் தமது வாக்குகளை அளித்தனர்.

வாக்களிப்பின்போது குடாநாட்டின் பல் வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட போதும் அவையெவையும் பாரதூரமானவை யாக இருக்கவில்லை.

தேர்தலையொட்டி நேற்று குடாநாட்டில் சந்தைகள் பலவும் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

### வட - கிழக்கு பிரதேசத்தில்

## புலிகளின் கட்டுப்பாட்டு மக்கள் வாக்களிப்பில் அதீத அக்கறை!

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யில் உள்ள கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதி வாக்காளர்கள் நேற்று பெரு மளவில் வந்து முகமாலையில் அமைக் கப்பட்டிருந்த கொத்தணி வாக்குச்சாவடிகளில் வாக்களித்ததாக அங்கிருந்துவரும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

வழமையாக முகமாலை சோதனை சாவடி கள் காலை 7 மணிக்கே திறப்பது வழக்கம். ஆனால் நேற்று வாக்களிப்பிற்காக அரை மணிநேரம் முன்னதாக காலை 6.30 மணிக்கு சோதனைச் சாவடி திறக்கப்பட்டது.

இவ்வாறு திறக்கப்பட்ட சோதனைச் சாவடி களில்- தேர்தல் வாக்களிப்பு இடம்பெறும் நிலையங்களில் இராணுவத்தினருக்கு பதி லாக பொலிஸாரே (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐம்பது வீதமான வாக்காளர்கள் யாழ்ப்பாணத்தில் வாக்களித்தனர்!

யாழ். மாவட்டத்திற்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக நடை பெற்ற தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களையும் சேர்ந்த 6 இலட்சத்து 44 ஆயிரத்து 279 வாக்காளர் களில் 50 வீதமானோர் வாக்களித்தனர் என, யாழ் மாவட்ட தேர்தல் செயலகம் அறிவித் துள்ளது.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை 4 மணிவரை இடம் பெற்றது.

நேற்றுக்காலையே அதிகளவான வாக் காளர்கள் உற்சாகத்துடனும், சுறுசுறுப்பா கவும் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தபோதும், நண்பகலுக்குப் பின்னர், மந்தகதியிலேயே வாக்களிப்பு இடம்பெற்றதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

வாக்களிப்பு நிலையங்களில் எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி வாக்களிப்பு இடம் பெறுவதற்கு பொலிஸாரும் இராணுவத்தின ரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட் டிருந்தனர்.

யாழ்.குடாநாடு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்டத்தில் கட்சிகளின் முன்னணி நிலைவரம்!

மானிப்பாய் தொகுதி

## தேர்தல் வன்முறைகள் குறைவு:

நிலைவரம்!

**மானிப்பாய் தொகுதி**
(2 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 23645 |
| ஈ.பி.டி.பி | - | 3215 |
| சுயேட்சை (1) | - | 632 |

**யாழ்ப்பாணம் தொகுதி**
(2 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 26895 |
| ஈ.பி.டி.பி | - | 2108 |
| சுயேட்சை (1) | - | 452 |

**ஊர்காவற்துறை தொகுதி**
(2 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 13911 |
| ஈ.பி.டி.பி | - | 1406 |

**உடுப்பிட்டி தொகுதி**
(2 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 24172 |
| ஈ.பி.டி.பி | - | 874 |
| சுயேட்சை (1) | - | 362 |

**கிளிநொச்சி தொகுதி**
(1 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 13830 |
| சுயேட்சை (1) | - | 110 |
| ஈ.பி.டி.பி | - | 83 |

**கோப்பாய் தொகுதி**
(1 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 11630 |
| ஈ.பி.டி.பி | - | 1314 |
| சுயேட்சை (1) | - | 219 |

**நல்லூர் தொகுதி**
(1 ஆம் சுற்றில்)

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 11380 |
| ஈ.பி.டி.பி | - | 1225 |
| சுயேட்சை (1) | - | 370 |

# தேர்தல் வன்முறைகள் குறைவு; 81 வீதமானோர் வாக்களித்தனர்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

நேற்று நடைபெற்று முடிந்த 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்புக்கள் நாடுபூராகவும் பாரிய வன்முறைகளற்ற வகையில் சுமுகமாக நடந்து முடிந்ததாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நேற்றைய தேர்தலில் 81 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பினை நாடுமுழுவதும் அளித்திருந்தனர். நாடு முழுவதிலும் 250 சிறுசிறு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் குருநாகல், நுவரெலியா, கண்டி மற்றும் வடக்கு கிழக்கின் சில இடங்களிலும் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வன்முறைச்சம்பவங்கள் தேர்தலைப் பாதிக்கக் கூடிய வகையில் இடம்பெற்றனவா என்பது தொடர்பான இறுதி அறிக்கை தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. இவர்களது அறிக்கைகளைப் பொறுத்தே ஏதாவது வாக்குச் சாவடிகளின் வாக்களிப்பை இரத்துச் செய்வதா என்பது தீர்மானிக்கப்படும்.

இந்தத் தேர்தல் சுமுகமான வகையில் நடந்து முடிந்ததற்கு ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவிற்கும் தேர்தல் ஆணையாளர் தனது நன்றியைத் தெரிவித்தார். (01)

இன்று மாலை
தேர்தல் முடிவுகளுடன்
விசேட பதிப்பு வெளிவரும்

## திருமலையில் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சி 2 ஆசனங்களைக் கைப்பற்றும் நிலையில் இருப்பதாக இன்று காலை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பிந்திய நிலைவரப்படி கட்சிகள் பெற்ற வாக்குகள் -

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழரசுக் கட்சி | - | 69600 | - | 2 |
| முஸ்லிம் காங்கிரஸ் | - | 64708 | - | 1 |
| ஐ.ம.சு.முன்னணி | - | 31155 | - | 1 |
| ஐ.தே.க | - | 16225 | | |

# தபால் மூலமான வாக்களிப்பில் சந்திரிகா கூட்டணி முன்னணியில்

அடுத்த அரசாங்கத்தை தீர்மானிப்பதற்காக நேற்று நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி தொடர்ந்து இடம்பெற்றுவரும் நிலையில், தபால் வாக்குகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடிய வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

இன்று அதிகாலை வெளியான 16 மாவட்டங்களில் தபால் மூலம் அ[illegible]க்கப்பட்ட வாக்குகளின் முடிவுகளின்படி வன்னி, யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடிய வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தபால் வாக்குகளில் தமிழரசுக்கட்சி வெற்றிபெற்றிருக்கிறது.

இதேவேளை- பதுளை மாவட்டம் ஹாலிஎல தொகுதி முடிவுமட்டும் வெளியாகியுள்ள நிலையில் - இதில் ஐ.தே.க வெற்றிபெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



யாழ்.குடாவின் நேற்றைய தேர்தல் காட்சிகள்



திருமலை கட்டைபறிச்சான் பகுதி கொத்தணி வாக்குச் சாவடிக் காட்சிகள்

# கரிகாலன், கௌசல்யன் சுவிற்சர்லாந்து பயணம்!




விடுதலைப் புலிகளின் மூன்று உறுப்பினர்களைக்கொண்ட குழு நேற்று சுவிற்சர்லாந்து பயணமானதாக கொழும்பிலுள்ள அந்நாட்டுத் தூதுவர் பெர்னாட்டினோ றீகாகோனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மூன்று பேரடங்கிய குழு சுவிற்சர்லாந்து செல்வதற்கு அனுமதி கேட்டதாகவும், அதன்படி இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர் இவர்களின் சுவிற்சர்லாந்து நிகழ்ச்சி நிரல் குறித்து தனக்கு எதுவும் தெரியாதெனவும் தெரிவித்தார்.

இவர்கள் சுவிற்சர்லாந்தில் மேற்கொள்ளவுள்ள எந்த நடவடிக்கையாக இருந்தாலும், அது அந்நாட்டின் சட்டதிட்டத்திற்கு அமைந்ததாகவே இருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சிரேஷ்ட உறுப்பினர் கரிகாலன், அவரது மனைவி எழுமதி கரிகாலன் ஆகியோரே சுவிற்சர்லாந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் ஐ.நாவைநோக்கி எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ்ப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# அசம்பாவிதங்கள் எதுவுமின்றி வன்னி மாவட்டத்தில் நடந்த தேர்தல்

## கண்காணிப்புக்குழு பிரதிநிதி தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் வன்னி மாவட்டத்தில் எதுவித அசம்பாவிதங்களோ, மனிதஉரிமை மீறல் சம்பவங்களோ இன்றி அமைதியாக இடம்பெற்றது.

இவ்வாறு வன்னி மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த மனித உரிமை ஆணைக் குழுவின் தேர்தல் விவகாரங்களுக்கான சட்டஆலோசகர் தட்சணாமூர்த்தி கெங்காதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வன்னி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்றுச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தோம்.

வாக்காளரின் உரிமைகள், பொலிஸ் அதிகாரிகள் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்கின்றார்களா, அத்துடன் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் அதிகாரிகள் கடமைகளைச் சரிவரச் செய்கின்றார்களா என்பது பற்றி மிகவும் உன்னிப்பாக அவதானித்திருந்தோம்.

கடந்த ஒரு மாதமாக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் பாரிய தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதனால், பாதிப்புக்கள் எதுவும் இடம் பெறவில்லை.

ஓமந்தையில் அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்குச்சாவடியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்திருந்த மக்கள் உற்சாகத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதே போல், உயிலங்குளம், மடு போன்ற பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் வந்து வாக்களித்தனர். எனினும் எந்தவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை.

இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் அதிகமாக வாழ்கின்ற மகாகச்சகொடி, மாமடுவ மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் எந்தவித அசம்பாவிதங்கள் இடம்பெறாதபோதும் மனித உரிமை மீறல் சம்பவங்களே இடம்பெற்றுள்ளது.

### பலத்தபாதுகாப்பின் மத்தியில் ஜனாதிபதி வாக்களித்தார்

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் உள்ளிட்ட பல முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் தமது வாக்குகளை செலுத்தினர்.

நிட்டம்புவ சங்கபோது மகா வித்தியாலய வாக்குச்சாவடியில் ஜனாதிபதி சந்திரிகா பலத்தபாதுகாப்புடன் தனது வாக்கையளித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடியில் பிரதமர் ரணிலும், ஹெல உறுமய தலைவரான வண. எல்லாவெல மேதானந்த தேரர் ஹெலிய கொட வித்தியாலயத்திலும், அமைச்சர் ஜெயசூரிய கம்பகா கிலிந்திவெல வித்தியாலயத்தில், தமது வாக்குகளை செலுத்தினர்.

அமைச்சர் ராஜித சேனாரட்ண களுத்துறை வித்தியாலயத்திலும், ஆறுமுகன் தொண்டமான் கொத்மலையில் தமது வாக்குகளை அளித்தனர். (01)

# நெடுந்தீவில் நேற்று நடந்த சுறுசுறுப்பான வாக்களிப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்று இடம்பெற்ற தேர்தலில் 56.4 சதவீதமான மக்கள் வாக்களித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நெடுந்தீவில் 4295 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 2423 பேர் நேற்று தமது வாக்குகளைப் பதிவுசெய்தனர்.

சுறுசுறுப்பாக இடம்பெற்ற இந்த வாக்களிப்பில் நெடுந்தீவு மத்தியில் அதிகளவான வாக்குகள் பதிவாகின. அங்கு 1605 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் 1059 பேர் வாக்களித்தனர்.

நெடுந்தீவு கிழக்கில் 1145 வாக்காளர்கள் பதிவு செய்திருந்தனர். இவர்களில் 668 பேர் வாக்குகளைச் செலுத்தினர்.

நெடுந்தீவு மேற்கில் 1545 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 696 பேர் வாக்குகளை அளித்திருந்தனர்.

நெடுந்தீவில் மூன்று சர்வதேசக் கண்காணிப்பாளர்களும் பணியாற்றினர். மாலை 4 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்ததும் நெடுந்தீவு மத்தியகல்லூரியில் இருந்து ஹெலி மூலம் வாக்குப் பெட்டிகள் யாழ். செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. (113)

# தென்கொரிய வர்த்தக குழு கொழும்பு வரவுள்ளது!

தென் கொரியாவில் இருந்து பத்துப் பேர் கொண்ட வர்த்தகக் குழு இந்த மாதம் 25 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது.

இந்தக் குழு முதலீடு சம்பந்தமாகவும், இலங்கை வர்த்தகர்களோடு பேச்சுக்களை நடத்துவதற்காகவும் வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிறைஞ்சனஸ் சங்கானை

சரத் குமார், விக்ரம், தேவயானி நடித்த

விண்ணுக்கும் மண்ணுக்கும்

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

THE ITTALION JOB

(சி-2262)

The Royal College Of Jaffna

ஆண்டு 1 இல் இருந்து மேற்படிப்பு வரை Grammar, Spoken English கடிதம், கட்டுரை, வினாவிடை வகுப்புகள் ஆங்கில மூலம்

விக்னேஸ்வரன் ஆச்சாரி,

426, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

பிளாக் வீதி, சங்கானை

(சி-2399)

ராஜா யாழ்ப்பாணம்.

வசீகரன், பூஜா நடித்த



கண்களால் கைதுசெய்

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த

A.R. ரஹ்மானின் இசையில்

உதயா

(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

K.K.S.றோட், இணுவில்.

இரு இடத்திலும்

A/L 2006 கலை வர்த்தகப் பிரிவுகள்

நாளை ஆரம்பம் 04.04.2004 ஞாயிறு

| | | | |
|---|---|---|---|
| யாழ்.நகரில் | - கலை | 9.00 | A.M |
| | வர்த்தகம் | 10.00 | A.M |
| இணுவிலில் | - கலை | 9.00 | A.M |
| | வர்த்தகம் | 3.00 | A.M |

(700)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



International University For Martial Arts - Japan பல்கலைக் கழகத்தினால் தகுதிகாண் சமய சமூக சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி நிஷானந்தா ஜுவல்லறி உரிமையாளர்

திரு.அ.ஆனந்தன் (Mr.Johnson Peter)

அவர்கட்கு 28.03.04 இல் கொழும்பில் 'கலாநிதி' (Doctor) பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் பல பட்டங்களைப்பெற்று வாழ்வு வளம் பெறவும், அவரை வாழ்த்துகின்றோம்.

நிஷாந்தனா ஜுவல்லறி ஊழியர்கள்

(669)

# மணிராசன்குளம் முகாம் குறித்து ஜனாதிபதி மௌனம் சாதிப்பதேன்

## கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை கேள்வி

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாக முகாம் ஒன்றினை அமைத்திருப்பதாகக் குற்றம்சாட்டிய ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது கட்சியினரும் இன்று மௌனம் சாதித்து வருவதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

திருகோணமலையின் மணிராசன் குளப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாக முகாம் ஒன்றினை அமைத்திருப்பதாகவும், இதனை படையினரின் ஒத்துழைப்புடன் அப்புறப்படுத்துமாறும் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு கடந்த ஓகஸ்ட் மாதமளவில் ஜனாதிபதி சந்திரிகா கட்டளையிட்டார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி - சமாதான ஒப்பந்தம் என்ற பெயரில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை விடுதலைப் புலிகளிற்குத் தாரை வார்த்துக் கொடுப்பதாகவும் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வந்தார்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினால் இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறி, ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்த பாதுகாப்பு அமைச்சை பறித்தெடுத்தையும் சுட்டிக்காட்டியுள்ள இந்த ஆங்கிலப் பத்திரிகை, விடுதலைப் புலிகளின் மணிராசன்குளம் முகாமை அகற்றுவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா இன்று மௌனம் சாதிப்பது ஏன்? எனக் கேள்வியெழுப்பியுள்ளது.

## ஒருதலைப்பட்ச பிரசாரம்; நடவடிக்கை எடுக்கப்படும்

### தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

அரச இலத்திரனியல் ஊடகங்களில் ஒருதலைப்பட்சமானமுறையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் பிரசார நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவினால் அரச ஊடகங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

சிங்கள, மற்றும் தமிழ் மொழிகளில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் - தமது கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதென ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியிருந்தது.

இதனையடுத்தே, இது குறித்து பூரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென அந்த அதிகாரி தெரிவித்தார்.

## கிழக்குப் பகுதிக்கு போராளிகளை அனுப்புவதற்கு பாதுகாப்பு வழங்க கோரிக்கை

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினரகள் 150 பேரை வன்னிப் பகுதியிலிருந்து திருகோணமலைச் சம்பூர்ப் பகுதிக்கு அனுப்புவதற்கு பாதுகாப்பு வழங்கவேண்டுமென்று விடுதலைப் புலிகள் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாகப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் பி.பி.சிக்கு அளித்த போட்டியில் குறிப்பிட்டார்.

[illegible]வர் மேலும் தெரிவிக்கையில்- புலிகளின் கோரிக்கையை அரசுக்கு அனுப்பிவைத்தோம். ஆனால், அத்தகைய பாதுகாப்பை இலங்கை அரசு எதிர்வரும் 5 ஆம் திகதிக்குப் பிறகு தான் வழங்கமுடியும் என்று கூறியுள்ளது.

இந்த 150 போராளிகளும் கிழக்குக்கு அனுப்பிவைத்தால், கிழக்கில் தற்போதைய நெருக்கடிக்கு அச்சுறுத்தல் ஏற்படுமா என்பது பற்றிய ஊகம் எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. அது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியும் அல்ல என்று அக்னஸ் பிரகடோட்ரயர் மேலும் தெரிவித்தார்.

## ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் 25 மில்லியன் நஷ்டஈடு கோரினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் - அரச ஊடகம் ஒன்றிடம் 25 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு கேட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து பிரிந்துசென்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளரான பிரியந்த தீரசிங்க என்பவரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் தனது மனதைப் புண்படுத்தும் வகையில் தன்னைத் தொடர்புபடுத்தி உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியானதாகவும், குறிப்பிட்ட அரச தொலைக்காட்சி நிறுவனம் இது தொடர்பாக 25 மில்லியன் ரூபா நட்டஈட்டினைத் தனக்கு வழங்கவேண்டுமெனவும் பிரியந்த தீரசிங்க தனது சட்டத்தரணி மூலமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரியந்த தீரசிங்கவின் சட்டத்தரணி சிராஸ் உசுபா - அண்மையில் பெலியத்த பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக்கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கானோரின் கைதட்டல்களிற்கு மத்தியில், பிரியந்த தீரசிங்கவால் கையளிக்கப்பட்ட வெண்புறாவினை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பறக்கவிட்டதாகவும், இச்செய்தியை திரிபுபடுத்தி இந்த அரச தொலைக்காட்சி, பிரியந்த தீரசிங்கவால் வழங்கப்பட்ட வெண்புறாவை பிரதமர் வாங்க மறுத்துவிட்டதாகவும், இதனால் கவலையடைந்த பிரியந்த தீரசிங்க - பிரதமர் சென்ற பின்னர் அவ் வெண்புறாவை பறக்கவிட்டதாகவும் இருமுறை செய்தி வெளியிட்டது.

எனவே, அரச தொலைக்காட்சியின் இந்தச் செயற்பாடானது தனது வாதியின் தேர்தல் பிரசாரத்தையும், அவரது மனத்தையும் புண்படுத்தியிருப்பதாகவும் பிரியந்த தீரசிங்கவின் சட்டத் தரணி சிராஸ் உசுபா மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத் தேர்தல் சில காட்சிகள்...


ஜனாதிபதி சந்திரிகா


பிரதமர் ரணில்


ஊனமுற்ற பெண் ஒருவர்



மூடப்படும் வாக்குப்பெட்டி

ஓமந்தை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில்...








ஓமந்தையில் திரண்டிருக்கும் வாக்காளர்கள்

மட்டக்களப்பில்...





# இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டி; மேற்கிந்திய அணி 224 ஓட்டங்கள்!


பிளின்ரொப்

வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கிடையே 4 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில், முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் பிரிட்ஜ்டவுனில் தொடங்கியது. மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக கெய்லும், கங்காவும் இறங்கினார்கள். கெய்ல் 6 ஓட்டங்களிலும், கங்கா 11 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்துவந்த லாராவும், சர்வானும் ஓரளவு தாக்குப்பிடித்து ஓட்டங்களைச் சேர்த்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 88 ஆக இருந்தபோது, லாரா பிளின்ரொப் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து சந்தர்போல், சர்வானுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் பொறுமையாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஓட்ட எண்ணிக்கை 167 ஆக இருந்தபோது, சர்வான், ஹார்மிசன் பந்தில் ஆட்டமிழந்தார். சற்று நேரத்திலேயே 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சந்தர்போலும் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து அணியினரின் சிறப்பான பந்துவீச்சால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 224 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இங்கிலாந்து தரப்பில் பிளின்ரொப் 5 விக்கெட்டும், ஹார்மிசன் 3 விக்கெட்டும், ஹோகார்ட், ஜோன்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும எடுத்தனர். பின்னர் தனது முதல் இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 20 ஓட்டங்களை எடுத்திருந்தது.

# இரண்டாவது டெஸ்ட் போட்டி; சக்லைன் முஸ்தக் நீக்கம்!

இந்திய கிரிக்கெட் அணி, பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கிடையேயான ஒருநாள் தொடரை இந்தியா கைப்பற்றியது.

இதையடுத்து 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் முல்தானில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி வெற்றியைப் பெற்றது. இரு அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் லாகூரில் தொடங்குகிறது. 2 ஆவது டெஸ்ட்டில் பங்குபெறும் பாகிஸ்தான் அணியை அந்நாட்டு கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

இதில் அந்த அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்தக் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக துடுப்பாட்ட வீரரான இம்ரான் நசீர் சேர்க்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு-

இன்சமாம், தவ்பிக் உமர், யாசீர் ஹமீத், இம்ரான் பர்கத், யூசுப் யுகானா, அப்துர் ரசாக், மொயின் கான், அக்தர், சபீர் அகமது, இம்ரான் நசீர், மிஸ்பா உல் ஹக், டேனிஸ் கனேரியா, அசிம்கமால், உமர் குல், சோயிப் மாலிக்,

இளம் வீரரான இம்ரான் நசீர் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2 சதமும், ஒரு அரைச் சதமும் அடித்துள்ளார், 57 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1340 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் ஒரு சதமும், 8 அரைச் சதமும் அடித்துள்ளார்.

# முல்தான் டெஸ்ட் போட்டியில் எனது பந்து வீச்சு எடுபடவில்லை

## சொஹைப் அக்தர் கூறுகிறார்

பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த சொஹைப் அக்தர் உலகின் அதிவேகப்பந்து வீச்சாளராகக் கருதப்படுகிறார். இந்தியாவிற்கெதிரான முதல் டெஸ்டில் 32 ஓவர்கள் பந்துவீசி 119 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டைக்கூடக் கைப்பற்றவில்லை. இந்தநிலையில் முல்தான் டெஸ்டில் தன்னால் சிறப்பாகப் பநது வீசமுடியவில்லை என்று, அக்தர் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது-

பாகிஸ்தான் அணியின் முன்னணி பந்து வீச்சாளராக நான் திகழ்கின்றேன். ஆனால் என்னால் முல்தான டெஸ்டில் பந்து வீச முடியாமல் போய் விட்டது. பந்து வீசுவதற்காக ஓட வரும்போது எனக்குள் பிரச்சினை இருக்கின்றது. இது தொடர்பாக இம்ரான்கானிடம் ஏற்கனவே பலமுறை ஆலோசனை கேட்டு இருக்கின்றேன். இது தொடர்பாக அவரைச் சந்தித்து மேலும் ஆலோசனை கேட்பேன். இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருக்கிறது. எஞ்சிய டெஸ்டில் எனது பந்துத்திறனை முழுமையாக வெளிப்படுத்துவேன். லாகூரில் நடந்த 4 ஆவது ஒருநாள் போட்டியில் சூதாட்டம் நடந்ததாக கூறப்படுவது முட்டாள்தனமானது. என அக்தர் கூறினார்.

# ஆட்டத்தை இடைநிறுத்த எடுத்த ராவிட்டின் முடிவு தவறானதாகும்

## இந்திய அணித்தலைவர் கங்கூலி


(கொல்கத்தா)

இந்திய கிரிக்கெட்அணி 15 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கிடையேயான முல்தானில் நடந்த முதல் டெஸ்ட்டில் இந்திய அணி சரித்திர வெற்றிபெற்றது.

இந்திய அணித்தலைவர் கங்கூலி பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த கடைசி ஒருநாள் போட்டியில் காயம் அடைந்தார். இதனால், முதல் டெஸ்டில் அவர் ஆடவில்லை. முழு உடல தகுதிபெற்று 2 ஆவது டெஸ்ட்டில் ஆடமுடியும் என நினைத்த கங்கூலிக்கு உடல் குணமாகவில்லை.

இதனால், சிகிச்சை பெறுவதற்காக அவர் முல்தானில் இருந்து நேற்று முன்தினம் இந்தியா திரும்பினார். விமானநிலையத்தில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

முல்தான் டெஸ்ட்டில் 194 ஓட்டங்கள் எடுத்து களத்தில் இருந்த டெண்டுல்கரை இரட்டைச்சதம் அடிக்கவிடாமல் டிக்ளேர் செய்தது தவறு. இது தொடர்பாக டெண்டுல்கர் தெரிவித்த கருத்தில் எனக்கும் உடன்பாடு உண்டு.

இந்த விடயத்தில் முதல் டெஸ்ட்டில் அணித்தலைவராகப் பணியாற்றிய ராகுல் ராவிட் தவறான முடிவு எடுத்திருக்கிறார். இதனால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

டெண்டுல்கரை இரட்டைச்சதம் அடிக்கவிடாமல் முன்கூட்டியே ராவிட் டிக்ளேர் செய்த பிரச்சினையை இத்துடன் மறந்துவிடவேண்டும். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை வெற்றி பெறுவதற்கான வழிகளில் நமது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

இந்த விடயத்தில் குறிப்பிட்டுக் கூறும்படி வேறு எதுவும் சொல்வதற்கு இல்லை. தவறு யார் செய்தாலும் அது தவறுதான். அணியின் நலனுக்காக அதை ஏற்றுக்

**விளையாட்டு**

கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

அணியின் நலனுக்காக அந்தத் தவறு நடந்துவிட்டது. நாம் எல்லோரும் நண்பர்கள். நண்பர்களுக்குள் தவறுகள் நடப்பது சகஜம் தான். அதை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவேண்டும்.

தவறுசெய்தது யார் என்பதைக் கண்டுபிடிக்கும் வேலையை இரு தரப்பினரும் விட்டுவிட்டு இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக் கொள்ளவேண்டும். சச்சின், ராகுல், நான், ஜோன்ரைட் அல்லது வேறு யார் தவறு செய்து இருப்பினும் அதை மறந்துவிட்டுத் தொடரை வெல்லும் குறிக்கோளுடன் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

# சோனியாவுக்குப் பதிலடி கொடுக்க வாஜ்பாய் சூறாவளி பிரசாரம்




நாடாளுமன்ற தேர்தல் பிரசாரம் எல்லா மாநிலங்களிலும் சூடுபிடித்து விட்டது. காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி தனது மின்னல் வேக சுற்றுப்பயணத்தை தீவிரப் படுத்தியுள்ளார்.

அவருக்குப் பதிலடி கொடுக்க பிரதமர் வாஜ்பாயை களமிறக்க பாரதீய ஜனதா மூத்த தலைவர்கள் மும்முரமாகி உள்ளனர். பிரதமர் வாஜ்பாயை எல்லா மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்களில் பேச வைக்கும் வகையில் சுற்றுப்பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

நாடெங்கும் குறைந்தபட்சம் 40 பொதுக்கூட்டங்களில் பிரதமர் வாஜ்பாய் பேசி ஆதரவு திரட்டுவார்.

உத்தரப் பிரதேசமாநிலத்தில் 4 நகரங்களில் நடக்கும் கூட்டங்களில் வாஜ்பாய் உரையாற்றுவார்.

ஆந்திரா, ஒரிசா, ராஜஸ்தான், கர்நாடகா, மராட்டியம், ஆகிய மாநிலங்களில் தலா 3 நகரங்களில் நடக்கும் பிரசார கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய் கலந்துகொள்வார். சட்டசபை தேர்தல் நடக்கும் ஆந்திரா, ஒரிசா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மக்களை கூடுதலாக சந்திக்க வாஜ்பாய் திட்டமிட்டுள்ளார்.

தினமும் இரண்டே இரண்டு பொதுக்கூட்டத்தில் மட்டும் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றும் வகையில் சுற்றுப்பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு ஒரு நாள் விட்டு ஒருநாள்தான் வாஜ்பாய் பிரசாரம் செய்வார் என்று தெரியவந்துள்ளது.

# டெஸ்ட் தர வரிசையில் அவுஸ்ரேலியா முதலிடத்தில்

டெஸ்ட் கிரிக்கெட் அணிகளின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட்சபை வெளியிட்டுள்ளது. இதில் 127 புள்ளிகளைப்பெற்று அவுஸ்ரேலியா முதலிடத்தில் உள்ளது.

112 புள்ளிகள் பெற்றுள்ள தென் ஆபிரிக்கா 2 ஆவது இடத்திலும், 102 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 3 ஆவது இடத்திலும், 101 புள்ளிகளுடன் நியூஸிலாந்து 4 ஆவது இடத்திலும், அதேபுள்ளிகளுடன் இங்கிலாந்து 5 ஆவது இடத்திலும் உள்ளது.

100 புள்ளிகள் பெற்றுள்ள இந்தியா 6 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கை 94 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 82 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே 55 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 1 புள்ளியுடன் 10 ஆவது இடத்திலும் உள்ளன.

# காங்கிரஸில் சேர்ந்தார் நடிகை வாணி ஸ்ரீ!

வசந்தமாளிகை படத்தில் சிவாஜி கணேசனுக்கு ஜோடியாக நடித்த பழம்பெரும் நடிகை வாணி ஸ்ரீ, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

சிவாஜிகணேசன், ஜெமினி கணேசன், முத்துராமன், சிவகுமார், ஆகியோருடன் பல தமிழ்ப் படங்களில் நடித்தவர் வாணி ஸ்ரீ, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரான அவர் இப்போது ஹைதராபாத்தில் வசித்து வருகிறார்.

தற்போது அவர் காங்கிரஸில் இணைந்தார். ஆந்திராவில் ஏதாவது ஒரு தொகுதியில் வாணிஸ்ரீ நிறுத்தப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டவுள்ளேன்

## நடிகை ஜெயப்பிரதா பேட்டி

(ஐதராபாத்)

நடிகை ஜெயப்பிரதா உத்தரப் பிரதேச மாநிலம் ராம்பூர் தொகுதியில் சமாஜ்வாதி கட்சி வேட்பாளராக போட்டியிடுகிறார். வருகிற 6 ஆம் திகதி அவர் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளார்.

அதன்பிறகு தேர்தல் முடியும் வரை ராம்பூர் தொகுதியில் தங்கி தேர்தல் பிரசாரம் செய்ய நடிகை ஜெயப்பிரதா திட்டமிடடுள்ளார். அவா செய்தியாளர்களிடம் பேசும்போது,

மக்கள்தான் எனது பலம். மக்கள் தான் எனது சக்தி. காஷ்மீர் மாநிலத்துக்கு அடுத்தபடியாக முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதி ராம்பூர் தொகுதி. அங்கு காங்கிரஸ் சார்பில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நூர்பனோவை எதிர்த்து நான் போட்டியிடுகிறேன். இதே தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளராக முன்னாள் எம்.பி ராஜேந்திர சர்மா போட்டியிடுகிறார்.

சொந்தத் தொகுதியிலிருந்து வேறு ஒரு தொகுதிக்கு போய் போட்டியிட, யாருமே விரும்புவதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் என்னை சமாஜ்வாதி கட்சியில் சேரவைத்தது.

எனக்கு மீண்டும் டெல்கி மேல் சபை எம்.பி பதவி கொடுக்க சந்திர பாபு நாயுடு மறுத்துவிட்டார். எனக்குள்ள சுயமரியாதையை நான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு நடிகை ஜெயப்பிரதா கூறினார்.



# கற்பனையாளர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஆமாம், இதிலே நீ கற்களை செய்தது என்னவாம்?" என்று கேட்டான் காந்தன்.

"ஒன்றுமில்லை. நடந்ததை நடந்தபடியே சொன்னேன்." "கற்பனை செய்வதில் புலி என்று அளந்தாயே!"

"நான் புலிதான், ஆனால் உங்களைப் போல் அல்ல நீங்கள் மூட்டை மூட்டையாய்ப் புளுகுகிறீர்கள், ஆனால் ஒரு காசுக்குப் பிரயோஜனம் இல்லை. நானோ, நேற்றைக்குப் பொய் சொன்னேன், கையிலே பலன் கிடைத்தது."

"என்ன பலன்"

"என்னவா? கேளுங்கள். நேற்றைக்குச் சாயங்காலம் அம்மாவும் அப்பாவும் வெளியே போய்விட்டார்கள், நானும் மீராவும் வீட்டில் இருந்தோம். மீரா படுத்து உறங்கிவிட்டாள். நான் தின்பண்ட அலு மாரியில் துழாவி, பழக்கூழ்ப் பாத்திரத்தில் பாதியைக் காலி செய்துவிட்டேன். இதற்காகத் திட்டு வாங்கவேண்டிவருமோ என்ற எண்ணம் அப்புறம் உண்டாயிற்று. கொஞ்சம் பழக்கூழ் எடுத்து மீராவின் உதடுகள் மேல் பூசிவிட்டேன். அம்மா வந்தாள். 'பழக் கூழைத் தின்றது யார்?' என்று கேட்டாள்.

'மீரா என்றேன். அம்மா பார்த்தாள், மீராவின் உதடெல்லாம் பழக்கூழ். இன்றைக்குக் காலையில் மீராவை அம்மா நன்றாக விளாசினாள், எனக்கோ, இன்னும் கொஞ்சம் பழக்கூழ் கொடுத்தாள். இது தான் பலன்."

"அதாவது நீ செய்த குற்றத்துக்குத் தண்டனை இன்னொரு வருக்குக் கிடைத்தது, அதிலே உனக்கு மகிழ்ச்சி வேறு?" என்றான் ரூபன்.

'உனக்கென்ன?

எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் நீ இருக்கிறாயே, நீ வந்து... அதாவது பொய்யன்! ஆமாம்!"

"நீங்கள் தான் பொய்யர்கள்!"

"போடா! உன்னோடு இருக்கையில் உட்கார எங் களுக்குப் பிடிக்கவில்லை.

"நானும் உங்களோடு உட்காரப்போவதில்லை."



மோகன் எழுந்து அப் பால் போய்விட்டான். காந்தனும், ரூபனும் வீட்டுக் குப் புறப்பட்டார்கள். வழி யில் ஐஸ்கிறீம் கடை ஒன்று இருந்தது. அவர்கள் நின்று, பைகளில் துருவித் தேடி எத்தனை காசு இருக்கிறது. என்று எண்ணிப் பார்த்தார் கள். இரண்டு பேரிடமும் இருந்த மொத்தக் காசில் ஓர் ஐஸ்கிறீம் வாங்கிப் பாதிபாதியாகப் பங்கு போட்டுக்கொள்வோம்" என்று யோசனை கூறினான் காந்தன்

ஐஸ்கிறீம் ஒன்றைக் கடைக்காரி அவர்களுக்குக் கொடுத்தாள்.

"வீட்டுக்குப் போய்ப் பகிர்ந்து கொள்வோம், அப்போதுதான் சரியாய் இருக்கும், என்றான் ரூபன்.

'போவோம்"

மாடிப்படியில் மீராவைச் சந்தித்தார்கள். அவள் கண்களில் அழத அறிகுறி காணப்பட்டது.

'நீ எதற்காக அழுதாய்?' என்று கேட்டான் ரூபன்.

அம்மா என்னை வெளியே போகக்கூடாது என்று சொல்லி விட்டாள்"

'எதற்காக?'

பழக்கூழுக்காக. நான் தின்னவே இல்லை. அதை மோகன்தான் என் மேலே கோள் மூட்டிவிட்டான். தானே தின்றுவிட்டான் போலிருக் கிறது. பழியை என் மேல் சாட்டிவிட்டான்."

'சந்தேகம் இல்லாமல் மோகன்தான் தின்றான். அவனே எங்களிடம் பெருமை அடித்துக்கொண்டான். நீ அழாதே வா. ஐஸ்கிறீமின் பங்கை உனக்குத் தருகிறேன்.." என்றான் ரூபன்.

'நானும் என் பங்கைத் தந்துவிடுகிறேன். ஒரே ஒருதரம் ருசி பார்த்துவிட்டுக் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னான் காந்தன்.

" உங்களுக்கு வேண்டாமா என்ன?"

"வேண்டாம். நானும் ரூபனும் இன்றைக்கு ஆளுக்குப் பத்து ஐஸ்கிறீம் தின்றாகி விட்டது"

என்று கூறினான் காந்தன்.

'இதை மூன்றாகப் பங்கு போட்டுக்கொள்வோமே. இதுதான் மேல்" என்று மீரா யோசனை சொன்னாள்.

"அதுதான் சரி! முழு ஐஸ்கிறீமையும் நீ ஒருத்தியே தின்றா யானால், உனக்குத் தொண்டை வலிக்கும்" என்றான் காந்தன்.

அவர்கள் வீட்டுக்குப் போய், ஐஸ்கிறீமை மூன்று பங்குகளாகப் பகிர்ந்து கொண்டார்கள்.

"ருசியான பண்டம்! எனக்கு ஐஸ்கிறீம் என்றால் உயிர். ஒரு தடவை என்ன பண்ணினேன் தெரியுமா, வாளி நிறைய ஐஸ்கிறீ மைத் தின்று தீர்த்து விட்டேன்" என்றான் ரூபன்.

"போடா போ, சும்மாக் கதை அளக்கிறாய்! நீ ஒரு வாளி ஐஸ்கிறீம் தின்றாய் என்றால் யார் நம்புவார்கள்!" என்று சிரித்தாள் மீரா.

'அது ரொம்ப ரொம்பச் சின்னது. காகித வாளி! சின்னக் கப்பை விடப் பெரியதல்ல.

3

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங் கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தின ரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................

கற்கும் பாடசாலை :..............................

கற்கும் தரம் :..............................

வீட்டு முகவரி :..............................

............................ ............... ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்



# தகவல் பெட்டி

கிரேக்கப் புராணங்களின்படி, அவர்களது கடவுளர்கள் வசிக்கும் இடமாகக் கருதப்பட்டது ஒலிம்பஸ் மலை.



ஒலிம்பஸ் மலை

குதிரையின் பற்களைப் பார்த்தே அவற்றின் வயதைக் கணிக்கமுடியும்.

உலகை முதன் முதலில் விமானத் தில் தனியாகச் சுற்றிப் பறந்த மனிதன் வைலி போஸ்ட் (Wiley Post). வருடம் 1933.

இந்தியாவின் பிரபலமான இசைக் கலைஞர் ரவிசங்கர் புகழ்பெற்றது 'சித் தார்' இசைக்கருவியால்.



தன்னுடைய கிளைகளிலிருந்து வேரை கீழே அனுப்பும் மரம் ஆலமரம். இதை 'விழு துகள்' என்போம். விழுதுகள் மண்ணை அடைந்ததும் உள்ளே வேரகப் பரவிவிடும்.



ரவிசங்கர்

லிட்டில் மாஸ் டர் என்று உலகம் முழுவதும் செல் லமாக அழைக்கப் படும் கிரிக்கட் வீரர் - சுனில் கவாஸ்கர்.

யூகலிப்டஸ் மரத்தின் இன்னொரு பெயர் 'பிசுகம்' மரம்.

மமோத் (Mammoth) என்பது யானைக ளின் முதாதை வம்சம். இது முற்றிலும் அழிந்துவிட்டது.

ஒரு பயிற்சி பெற்ற பூமராங் எறிபவரால் சுமார் ஐம்பது மீற்றர் வரை அதை எறிந்து திரும்பக் கைக்கு வர வழைக்க முடியும்.



சுனில் கவாஸ்கர்

போர்செலின் (Porcelain) வகை பொருட் களின் உள்ளே ஒளியால் ஊடுருவமுடியும்.

உலகின் மிகப்பெரிய பாலைவனமான சஹாரா, தனக்கு அடுத்து வரும் பத்து பாலை வனங்களின் ஒட்டு மொத்த பரப்பளவை விட வும் பெரிதாகும்.



ஒரு மனிதனின் தொடை எலும்பை விட உதைத்து, உடைக்கும் அளவிற்குப் பலம் பொருந்திய கால்கள் கொண்ட ஒரே பறவை நெருப்புக்கோழி.

பறவைகளில் ஆந் தையின் முட்டை மட் டுமே முழு உருண்டை வடிவில் இருக்கும்.



ராபர்ட் கிளைவ்

14 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆண்ட மூன்றாம் எட்வர்ட் ஆட்சியில் - ஒருவர் ஒருநாளில் இருவேளைக்கு மேல் உணவு உண் டால் அதைத் தண்டிக்கும் வகையில் சட்டம் இருந்தது.



தமிழ் நாட்டில் ராபர்ட் கிளைவ் ஆட்சிக் காலத்தில் மைல் கற்கள் நடப்பட்டன. பூஜ்யத்தில் ஆரம்பிக் கும் மைல் கற்களை இன்றும் கடலூரில் காணலாம்.

ஆண் சிங்கத்துக்கு கம்பீரத்தையும் அழகையும் தரும் பிடரிமுடி மூன்று வயதான பின்தான் முளைக்கும்.

**சிந்தனைக்கு!**

கடமைகள் நம்முடையவை. நிகழ்ச்சிகள் கடவுளுடையவை.



# சிறுவர் அரங்கம்

அன்புள்ள சிறுவர்களே!

உங்களின் ஆக்கங்களான கதைகள், சுயசரிதைகள் கைவண்ணத்தில் வரையும் ஓவியங்கள் என்பன குறைவாகவேயுள்ளன. கூடுதலாகப் பொது அறிவு, விடுகதைகளும்தான் எழுதி அனுப்புகிறீர்கள். பொது அறிவுகளும், விடுகதைகளும் எழுதி அனுப்பத்தான் வேண்டும். ஆனால், வேறு ஆக்கங்களையும், நீங்களாகவே எழுதி அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். கிறுக்கல்கள்தான் இன்றைய காலகட்டத்தில் வடிவமைக்கப்படுகின்றது. அகவே நீங்களும் ஏதாவது ஒன்றினை எழுதி, அதனை உங்களின் பாடசாலை ஆசிரியரிடம் காட்டி பிழையானதை சரிப்படுத்தி அனுப்பி வையுங்கள்.

நீங்கள் எழுதும் ஆக்கங்களைப் பிற மாணவர்களும் படிப்பதால் ஆர்வத்துடன் நல்லதைத் தெரிவுசெய்து அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள்.

# சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| A.C. | - | Accountant |
| A.D. | - | Anno Domini |
| B.C. | - | Before Christ |
| D.S. | - | Divisional Secretary |
| B.A. | - | Bachelor of Arts |
| T.T. | - | Trained Teacher |
| A.M. | - | Ante Meridian |
| P.M. | - | Post Meridian |
| O.I.C. | - | Officer In Charge |

சாரங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- பு.ஜெஸ்மி
கற்கும் பாடசாலை :-
விக்கினேஸ்வராக் கல்லூரி
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை வாசித்தல், நடனம்.



முழுப்பெயர் :- ம.பிரசன்னா
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்,
கிரிக்கெட்.



முழுப்பெயர் :- ர.திருக்ஷன்
கற்கும் பாடசாலை :-
சென் ஜோன்ஸ் கல்லூரி
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை,
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- அ.சிந்துஜா
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டு,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- பொ.விஜிதா
கற்கும் பாடசாலை :-
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கட்டுரை எழுதுதல்.

முழுப்பெயர் :- ஆ.அங்கஜன்
கற்கும் பாடசாலை :-
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல்,
பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- க.சஜீந்திரன்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், ஓவியம் வரைதல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- ந.நேந்திரபாலன்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, சித்திரம் வரைதல், பத்திரிகை
வாசித்தல், மிருதங்கம், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- சி.மதுசன்
கற்கும் பாடசாலை :-
கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல்,
விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................. ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# உங்களுக்குத் தெரியுமா?

1. 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என்று சொன்னவர் - கணியன் பூங்குன்றனர். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொன்னவர் - திருமூலர்

2. 'வினையே ஆடவர்க்கு உயிரே' - இது குறுந்தொகை. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று கூறியது - மணிமேகலை

3. 'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா' என்று பாடியவர் - பாரதியார். 'புதியதோர் உலகு செய்வோம்' என்று பாடியவர் - பாரதிதாசன்

4. 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று பாடியவர் - நாமக்கல் கவிஞர். 'இப்படை தோற்பின் எப்படை வெல்லும்' என்று பாடியவர் - மனோன்மணியம் சுந்தரனார்.

5. 'கல்வி கரையிலே கற்பவர் நாள் சில' என்றுரைத்த நூல் - நாலடியார். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்று உரைக்கும் நூல் - உலக நீதி

6. 'அன்பே சிவம்' என்று சொன்னவர் - திருமூலர். 'ஆருயிர்க்கெல்லாம் அன்பு செயல்வேண்டும்' என்று பாடியவர் - வள்ளலார்.

7. 'உள்ளம் பெரும் கோயில், ஊனுடம்பு ஆலயம்' என்று பாடியவர் - திருமூலர். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று பாடியவர் - தாயுமானவர்.

8. 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் என்பது - நாமக்கல் கவிஞரின் பாடல். செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் எமது செல்வம் என்று பாடியவர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

9. 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாடியவர் - பாரதியார். 'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று பாடியவர் - கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

10. 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று பாடியவர் - திருநாவுக்கரசர். மனித சாதியில் துன்பம் யாவும் மனதினால் வரும் நோயடா என்றவர் - கவிஞர் கண்ணதாசன்.

# சிறுமியும் காளான்களும்

இரண்டு பெண்கள் காளான்கள் சேகரித்துக் கொண்டு வீடு திரும்பினார்கள். அவர்கள் இரும்புப் பாதையைத் தாண்டி வரவேண்டியிருந்தது.

ரயில் தூரத்தில் இருப்பதாக எண்ணி கேட்டில் ஏறித் தண்டவாளத்தின் நடு வழியே நடந்தார்கள்.



பின்னே நடக்காதே என்று தங்கையைப் பார்த்துக் கத்தினாள் மூத்தவள். ஆனால், ரயில் நெருங்கி வந்து உரக்கத் தடதடத்ததால், சின்னவளுக்குச் சரியாகக் காதில் விழவில்லை. பின்னே ஓடும்படி அக்காள் சொல்கிறாளாக்கும் என்று நினைத்தாள். தண்டவாளத்தின் நடுவாகவே திரும்பி ஓடினாள். கால் இடறி விடவே - காளான்கள் விழுந்து சிதறின. அவள் அவற்றைப் பொறுக்கத்தொடங்கினாள்.

ரயில் பக்கத்தில் நெருங்கிவிட்டது. எஞ்சின் டிரைவர் முடிந்தவரை சங்கு ஊதினான்.

காளான்களை எறிந்துவிடு என்று கத்தினாள் மூத்தபெண். சின்னவளோ காளான்களைப் பொறுக்கும்படி அக்காள் சொல்கிறாளாக்கும் என்று நினைத்து இருப்புப் பாதைவழியே ஊர்ந்தாள்.

சாரதியால் ரயிலை நிறுத்தமுடியவில்லை. பலமெல்லாம் கொண்டு உரக்க ஊதிக்கொண்டு சிறுமியின் மேலாகக் கடந்துசென்றது ரயில்.

பெரியபெண் அழுது அரற்றினாள். பிரயாணிகள் எல்லோரும் பெட்டிகளின் ஜன்னல்கள் வழியே பார்த்தார்கள். கண்ணன் ரயிலின் கடைசிப்பெட்டிக்கு ஓடிப்போய் சிறுமிக்கு என்ன நேர்ந்தது என்று பார்த்தான்.

வண்டி கடந்து சென்றதும் பெண் தண்ட



வாளங்களுக்கு நடுவில் தலை தரையில் படக் கிடப்பதையும், அசையாமல் இருப்பதையும் எல்லோரும் கண்டார்கள்.

பின்னர் ரயில் வெகுதூரம் சென்ற பின்பு சிறுமி தலையை நிமிர்த்தினாள். முழந்தாள் படியிட்டு உட்கார்ந்தாள். காளானகளைப் பொறுக்கித் திரட்டினாள். அக்காளிடம் ஓடிச்சென்றாள்.

# மைக்கல் ஃபாரடே



காந்தத்தை மின்சாரமாக மாற்றுவது எப்படி? என்பதை உலகுக்கு செய்து காட்டியவர் மைக்கல் ஃபாரடே. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் முனைந்தது 1831 ஆம் ஆண்டில்தான். இதற்கு அவர் கண்ட விடை - வரலாற்றுப்புகழ் பெற்றது. அதைக் காண அவருக்குப் பத்து நாட்களே எடுத்தன.

லண்டன் நகரின் புறநகர்ப் பகுதி ஒன்றில் 1791 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று மைக்கல் ஃபாரடே பிறந்தார். அவருடைய தந்தையார் இரும்புக் கொல்லர், ஏழை. ஆதலால் ஏழ்மையில் பிறந்த இவர் - அதிகம் படிக்கவில்லை. பத்திரிகை விற்கும் தொழிலினை செய்து வந்தார். பின்பு புத்தகம் கட்டும் தொழிலினைச் செய்துவந்தார்.

புத்தகம் கட்டும் தொழில் செய்ததனால், நிறையப் புத்தகங்களைப் படித்து வந்தார். இரண்டு நூல்கள் இவரின் வாழ்வில் உதவியது. அதாவது 'என்ஸைக் கிலோப்பீடியா', 'ப்ரிட்டானிக்கர்' அதிலிருந்துதான் மின்சாரத்தைப் பற்றிய கருத்துக்களை முதன்முறையாகத் தெரிந்துகொண்டார்.

மற்றொன்று ஜேன் மார்ஸெட்டு அம்மையார் எழுதிய 'இரசாயனத்தைப் பற்றிய பேச்சுக்கள்' - இரசாயனத்துறையில் அவரின் அறிவுக்கு மேலும் அடிகோலியது. இந்த இரண்டு நூல்களும்தான் இரசாயன ஆராய்ச்சியையும், மின்சார ஆராய்ச்சியையும் மேற்கொள்ள அவருக்கு ஆதரவாக இருந்தது.

அவர் பின்னர் பகுப்பு விதிகள் சிலவற்றைக் கூறினார். அவை இப்போது ஃபாரடேயின் மின்னார் பகுப்பு விதிகள் எனப்படுகின்றன. குழந்தைகள் வைத்து விளையாடும் சிறிய விளையாட்டு ரயில் இயங்கும், சிறிய மோட்டாரில் இருந்து - பிரமாண்டமான எலெக்ரிக் ரயில் எஞ்ஜின்களில் இயங்கும் மாபெரும் மோட்டார்கள் வரை உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு மோட்டாரும் அந்த அடிப்படைத் தத்துவத்தின்படியே இயங்கி வருகிறது.

1831 ஆம் ஆண்டு முதல் அவர் காலமான நாளாகிய 1867 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வரையில் அவர் தம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடாத்திவந்தார்.

மின்சார மோட்டார், மின்சாரஜனனி என்றும் இரண்டு இயந்திரங்களும் இயங்கக் காரணமாக இருந்தவர் இவரேயாவார்.

### பாடசாலைகளில்

# குணநல உள்ளீடுகள் சரியாகப் பேணவில்லை

### மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளில் குணநலன் உள்ளீட்டிற்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், இதற்கான நடவடிக்கைகள் கல்வி வலயங்களில் மிகவும் பின்தங்கியநிலையில் காணப்படுவதாகவும், மாகாணமட்ட மேற்பார்வையின்போது, பெரும்பாலான பாடசாலைகளில் பல குறைபாடுகள் காணப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்,

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு கோட்டக் கல்வி அதிகாரிகளிடம் பங்களிப்பு அவசியம் எனவும் அவர் சுற்று நிருபம்மூலம் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பியும் பாடசாலைகளில் காணப்பட்ட குறைபாடுகள் குணநல உள்ளீடு சம்பந்தமான ஆவணங்கள் முறையாகப் பேணப்படவில்லை.

பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை.

வகுப்பறைக்கு - கற்பதற்கு பொருத்தமில்லாத பொருட்கள் கொளவனவு செய்யப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் முறையாக வகுப்பறைகளில் பயன்படுத்தப்படவில்லை.

பல கோட்டப் பாடசாலைகளில் குணநல உள்ளீடுகள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள், கோட்டக் கல்வி அதிகாரிகளினால் மிகக் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலைச் சமூகம் குணநல உள்ளீடு தொடர்பாக போதிய அளவு விளக்கத்தைப் பெற்றிருக்கவில்லை.

குணநல உள்ளீடு தொடர்பான நடைமுறைகள் தனியாக அதிபர்களால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (122)

### உரிய ஆணவங்கள் இன்றி

# ஓட்டோக்கள் சேவையிலீடுபட நீதிமன்றம் தடை விதிப்பு!

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பன இன்றி சேவையிலீடுபட்ட ஓட்டோக்களை சாவகச்சேரி பொலிஸார் - சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைத்தபோது, அந்த ஓட்டோக்களுக்குரிய ஆவணங் களைச் சமர்ப்பித்த பின்னர் ஓட்டோக்களை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமென நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், உரிய ஆவணங்கள் இன்றி ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடுவதையும் சாவகச்சேரி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

# ஓய்வூதிய முரண்பாடுகளை திருத்தியமைக்க நடவடிக்கை

1996 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் திருத்தி அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.ரி.திலகரட்ணாவால் சகல பிரதேச செயலகங்களுக்கும் 6-2004 இலங்கமுடைய ஓய்வூதியச் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சுற்று நிருபத்தின்படி பின்வரும் விடயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்படவுள்ளன.

1996 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியங்களில் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குரிய ஓய்வூதியத்திற்கு நிகராக மாற்றியமைக்கப்படும்.

1996 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வழங்கப்பட்ட படிகள் மற்றும் அதிகரிப்புக்கள் மேற்குறித்த திருத்தங்களுடன் தொடந்து வழங்கப்படும்.

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள ஓய்வூதியர்களது தனிப்பட்ட ஆணவக் கோப்புக்களுக்கு அமைய இந்தத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. (24)

# மருந்துச்சாலை பதிவுச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் சித்த மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருவதை தொழிற்பாடாகக் கொண்ட சித்தமருத்துவ கூட்டுறவுச் சங்கம் - கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, சிறப்பாக இயங்கி வருவதுடன், இடர்பாடுகள் மிகுந்திருந்த காலத்தில் இந்த மாவட்டத்தின் பிரதேச சபைகளுடைய மருந்துத் தேவைகளை முற்று முழுவதுமாகப் பூர்த்திசெய்திருந்தது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யும் முகமாக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்தவருட இறுதிப் பகுதியில் இந்த இடத்திற்கு விஜயம் செய்த ஆயுர்வேத ஆணையாளர் - மருந்துச்சாலையைப் பார்வையிட்டு திருப்தி கண்டிருந்தார்.

இதற்கமைய இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு, மருந்து உற்பத்திக்கான அனுமதி 01.01.2004 முதல் ஆயுர்வேதத் திணைக்களத்தால் வழங்கப்படுகிறது.

# சேதமடைந்து வரும் சங்கத்தானை வீதி

சாவகச்சேரி பகுதியில் மிதிவெடி அகற்றும் ஹலோட்றஸ்ட் நிறுவனத்தினர் மணல் ஏற்றிப் பரிசோதிப்பதற்கு சங்கத்தானை, பெரியமாவடி வீதிகளை 3 மாதத்திற்கு மேலாக பயன்படுத்துவதனால், மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சங்கத்தானை, பெரியமாவடி பகுதிகளிலுள்ள வீதி - கடந்த 30 வருடகாலமாக மீளப் புனரமைக்கப்படவில்லை. இந்த வீதியூடாக கனரக வாகனங்கள் செல்கின்றமையினால் வீதி பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.

இதனால், வீதியூடாகச் செல்லும் பிரயாணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். வீதி புனரமைக்கப்படாமையினால் - மிதிவெடி அகற்றும் பிரிவினரும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக வீதிகளிலும், சந்திகளிலும் பாரிய குழிகள் ஏற்படுகின்றன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (25)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வருடாந்த பொங்கல் விழா

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா - எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் தினத்தன்று பொங்கிப் படைக்கும் அடியார்கள் இராஜகோபுரத்தின் முன்றில் அமைக்கப்பட்டிருக்கும் தற்காலிக மண்டபத்தில் படையல்களைப் படைத்து, நேர்த்தியைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கடல்வள ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தரம் 10, 11 வகுப்புக்களுக்கு கல்வி கற்பித்துக்கொண்டு இருக்கும் கடல் உயிரின வளத் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு (புதிய நேரம்) யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கடல்வள ஆசியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

### சிகை அலங்கரிப்பாளர்கள் புகைப்பிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

சிகை அலங்கரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது - மது அருந்துவது புகைப்பிடிப்பது தடை செய்யப்பட்டிருப்பதாகத் தீவக சிகை ஒப்பனையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறும் தொழிலாளர் மற்றும் நிலைய உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் சங்கச் செயலாளர் அன்ரன் இராசநாயகம் அறிவித்துத்துள்ளார். (206)

### பயிற்சி முடித்தோருக்கான சான்றிதழ்கள்

தகவல் தொழில்நுட்பம் பூங்காவில் பயிற்சியை முடித்து வெளியேறிய மாணவர்கள் - எதிர்வரும் 6 ஆம் திகதிமுதல் தமக்குரிய சான்றிதழ்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சான்றிதழ் பயிற்சிநெறி (5 ஆம், 6 ஆம் அணிகள்), டிப்ளோமா பயிற்சிநெறி (2 ஆம், 3 ஆம் அணிகள்), செய்முறைப் பயிற்சி நெறி (7 ஆம், 8 ஆம் அணிகள்) ஆகியவற்றின் சான்றிதழ்களே வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட அணிகளுக்கும் முன்னைய அணிகளுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## கச்சதீவு திருநாளிலிருந்து சில காட்சிகள்









கடந்த 30 ஆம் திகதி கச்சதீவு அந்தோனியார் கோயில் திருவிழாவுக்குச் சென்ற - பங்குத்தந்தையர்களை அங்கு கூடிநின்றோர் வரவேற்பதையும், கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும், திருச்சொரூப பவனியையும், தமிழகப் பத்திரிகையாளர்களையும் முறையே படங்களில் காணலாம். (113)

கிழக்கின் நிலைப்பாடு

கவிதன்

# கருணா என்ற — இன்னொரு ஈனப்பிறவி

புலிகளின் தலைமை, மட்டக்களப்பு - அம்பாறை போராளிகளுக்கு சமஅளவு அதிகாரங்களையும் பதவிகளையும் வழங்கவில்லை, கிழக்கிலங்கை பின்தங்கியிருப்பதற்கு புலிகளின் தலைமையின் பாராமுகமே காரணம்' என்பதே கருணா தனது முடிவுக்காக முன்வைத்த குற்றச்சாட்டு.

மீண்டும் புலிகளின் தலைமையுடன் இணைந்து செயற்படுவதாக இருந்தால், இதுகுறித்து புலிகளின் தலைமை என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறீர்கள்? - இது செய்தியாளரின் கேள்வி.

'உளவுத்துறை பொட்டம்மானையும், நிதித்துறை தமிழேந்தியையும், காவல்துறை நடேசனையும் நீக்கி விடவேண்டும் - இது கருணா.

இந்த மூவரையும் நீக்குவதன் மூலம், கருணா கிளப்பியுள்ள கிழக்கிலங்கையின் பிரதேசவாதப் பிரச்சனை தீருவதற்கு எந்த வாய்ப்புமே இல்லை என்று பார்க்கும்பொழுது, கருணா எங்கேயோ சொதப்பி விட்டார் என்று இலகுவாகப் புரிந்துவிடும்.

விடுதலைப் புலிகளின் தலைமையிலிருந்து பிரிந்து போவதாக அறிவித்த சில மணி நேரத்தில் வழங்கிய செவ்வியில், கருணா முன்வைத்த குற்றச்சாட்டும், அதற்கான நிவர்த்தி நிலைப்பாடும் இவை மட்டுமே.

பின்னர் சுதாகரித்துக்கொண்டு, அதையும் இதையும் அடுத்தடுத்துச் சொன்னாலும், அந்த முதல் நாளில் அவர் கொடுத்த காரணம், அவரது நம்பகத்தன்மையை நலிவடைய வைத்துவிட்டது.

அடித்து முந்திக்கொண்டு நோர்வேயும், ஜப்பானும் தன்னிடம் ஓடிவந்து மடிப்பிச்சை கேட்கும். இறங்கிவந்து இணங்கிக்கொள் என்று தன்னிடம் கோரும், புலிகளின் தலைமையை ஓர் இணக்கப்பாட்டிற்கு வரும்படி அழுத்தம் கொடுக்கும், இதற்கிடையில் கிழக்கிலங்கைத் தமிழர்கள் தன்னை கிழக்கின் விடுதலை நாயகனாகக் கொண்டாடுவார்கள் என்றெல்லாம் கருணா கனவுகண்டு கொண்டிருக்க, நடந்ததென்னவோ எதிர்மாறான நிகழ்வுகள்தான்.

நோர்வேயும், ஜப்பானும் ஓடிவந்தது என்னவோ உண்மைதான், கருணாவும் தனது திட்டப்படிதான் எல்லாமே நகர்வதாக அனுமானித்ததும் உண்மைதான், ஆனால், வந்தவர்கள் புலிகளின் தலைமையைச் சந்தித்துவிட்டு, சத்தமின்றித் திரும்பியபோதுதான் கருணாவுக்கு நிஜங்கள் வெளிக்க ஆரம்பித்தன.

கருணா எதிர்பார்த்த திசையில் காய்கள் நகரவில்லை என்பதால், இனி காய்களை தானே நகர்த்த வேண்டிய கட்டாய நிலை. அந்த முயற்சியில்தான், பத்திரிகை எரிப்புக்கள், கடையடைப்புக்கள், கைதுகள், வேட்பாளர் சந்திப்புக்கள் எல்லாமே. இருந்தாலும் இது'

'நேத்துப் பிறந்த குரங்கு குட்டிக்கரணம் போட்டுக் காட்டினமாதிரி' தானும் தலைமைக்கும் புத்தி சொல்லப் போய் தன்னிலை கெட்டுப்போய், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறல், திண்டாட்டம்! உண்மைகள் இப்போது அடுக்கடுக்காய் வெளிவர ஆரம்பித்துள்ளன.

- கடந்த ஐந்து வருடங்களாக, கருணா தனக்கான தனித் தலைமையில் குறிவைத்து செயற்பட்டமை

- தனது குடும்பத்தை மலேசிய நாட்டில் குடிவைத்ததோடு, தனக்கென பெருந்தொகைப பணத்தை முதலீடு செய்தமை.

- தலைவரின் உத்தரவில் உள்ளெடுக்கப்பட்ட பெருந்தொகை ஆயுத தளபாடங்களை தனக்கு மட்டுமே தெரிந்த இடங்களில் மறைத்து வைத்தமை.

- தலைமைக்குத் தெரியாமல், தனக்கென ஓர் உளவுப்படை வைத்திருந்தமை.

- தலைமைக்குத் தெரியாமல், தனக்கென ஓர் உயர் பாதுகாப்புப்படையை உருவாக்கியமை.

- தலைமைக்குத் தெரியாமல், வெளிநாடுகளில் முதலீடு செய்தமை.

- தலைமையின் முடிவின்றி, தன்னிச்சையாக முடிவுகள் எடுத்தமை.

- அமைப்பின் துறைகளுக்கான பிரத்தியேக பொறுப்பாளர்களோடு கலந்தாலோசிக்காது செயற்பட்டு வந்தமை.

- தனது நடவடிக்கைகளை மேலிடத்திற்கு அறிவிக்க மறுத்தமை.

- தனது நேரடி நிர்வாகத்தின் கீழ், தன்னைப் பலப்படுத்தும் நோக்குடன் தனியாக ஒரு பத்திரிகை நடாத்தியமை.

- அமைப்பிலிருந்த தனது சகோதரர்கள் இருவரை, தனது இரகசியத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியமை.

- இன்னும் பல பண மோசடிகள், காதல் லீலைகள், இரகசியத் தொடர்புகள் மற்றும் மிரட்டல்கள், வன்முறைகள் என்று இப்பட்டியல் நீண்டு செல்லும்.

ஆக, கருணா சுயநல பாதுகாப்புக்காக பிரதேசவாதத்தைத் தூக்கியிராவிட்டால், இப்போது மட்டக்களப்பு பிரதேசமே கதிகலங்கிப் போயிருப்பது குறித்து அவசியம் கவலைப்பட்டிருப்பார். ஆனால், மட்டக்களப்பு மக்கள் கதிகலங்கினாலென்ன, கண்ணீர் விட்டாலென்ன, தமிழர் வியாபாரங்கள் பாழாய்ப் போனாலென்ன, பறிபோனாலென்ன, யாருக்கு அவர்களைப் பற்றிக் கவலை? கருணா பிரதேசவாதம் மூலம் தன்னைக் காத்துக்கொள்ள முயன்றாரேயொழிய கிழக்கையல்ல. இதை இன்னும் ஒரு சிறுதொகை கிழக்கிலங்கை மக்கள் உணர்ந்துகொள்ளாது இருப்பது அதிசயமாக இருக்கிறது.

கிழக்கைப்பற்றிக் கவலைப்படாது, வடக்கின் விடுதலையை வென்றெடுப்பதாக இருந்தால், வடக்கு மட்டும் தனிஈழமாக மலர்ந்து, இருபது வருடத்துக்கு முன்னரே இரண்டாவது சிங்கப்பூராக மாறியிருக்கும். கிழக்கும் இணைந்த தமிழீழம் தான் தமிழரின் தாயகம் என்று உறுதியாக புலிகளின் தலைமை இருந்ததால் மட்டுமே, இதுவரை இந்தக் கடுமையான போராட்டம். வடக்கை மட்டும் வென்றெடுப்பதே புலிகளின் தலைமையின் நோக்கமாக இருந்தி ருந்தால், கருணா என்ற ஒரு தளபதியை யாரும் அடையாளம் கண்டு கொள்ளக்கூட வாய்ப்பிருந்திருக்காது. கருணா என்ற முரளீதரன், புலிகள் அமைப்பில் பால் குடியாக இருந்தபோதே, தமிழீழப் பிரச்சனை தீர்ந்து போயிருக்கும். ஆனால், கிழக்கும் தேவை, அதுவும் வடக்கின் சமஅளவு அதிகாரங்கள் படிமானங்களோடு ஒன்றாகத் தரவேண்டும் என்று அழுத்தம் கொடுத்த ஒருவர், ஈழத் தமிழரின் வரலாற்றிலேயே, வே.பிரபாகரன் ஒருவர்தான்.

1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற காலம் முதல், வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒன்றான தமிழர் தாயகம் என்று உரிமை கொண்டாடுவதில் தேர்தல் காலத்தில் பலர் குளிர்காய்ந்திருந்தாலும், வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசமே தமிழர் தாயகம் என்பதை, வெற்றியின் போதும் தோல்வியின் போதும், ஏன், இந்திய இராணுவம் கொடூரப் போர் புரிந்து, கிழக்கில் வரதராஜப்பெருமாளை முதலமைச்சராக பலவந்தமாக நியமித்து, வடக்கும் கிழக்கும் இரு மாகாணங்களாக ஒரு முதலமைச்சரின் கீழ் இயங்கும் என்று 'றீல்' விட்டபோதும் கூட, புலிகளின் தலைமை அடர்ந்த காட்டுக்குள் இருந்து, வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு பிரதேசமே தமிழர் தாயகமாக அமையமுடியும் என்று ஒற்றைக் குரலில் ரீங்காரமிட்டது.

அப்போதெல்லாம், குலைக்காமல் வாலையாட்டிய சின்னன்கள், பதவியையும் புகழையும் பணத்தையும் சுகத்தையும் கண்டதும், நச்சுப்பாம்பாக உருமாறியிருப்பது சுயநலம் தவிர வேறெதுவுமில்லை. பிரதேசவாதம் என்ற மொட்டைத் தலைக்கும், பொட்டம்மான் என்ற முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது, நகைப்பிற்கிடமானது.

பொட்டம்மான் நிர்வகிக்கும் உளவுத்துறை, வடக்கு - கிழக்கு குறித்த பிரதேசவாரியான எந்த முடிவையும் எடுப்பதில் பங்கெடுக்கப் போவதில்லை, பங்கெடுத்திருக்கவும் வாய்ப்பில்லை. நீதித்துறையும், நிதித்துறையும், சட்டத்துறையும், பாதுகாப்புத்துறையும் கூட வடக்கு - கிழக்கை பிரிப்பதா, இணைப்பதா என்ற வாதத்திலும் பிரதிவாதத்திலும் கலந்து கொண்டிருக்க வாய்ப்பேதுமில்லை. ஆக, கருணாவுக்கு ஆறாவது அறிவு, மீதி ஐந்தறிவின் வேகத்தில் செயற்பட மறுத்திருக்கிறது என்பதே நிஜம்.

எல்லாம் இப்போது நன்றாகப் புரிந்து விட்டது. பிரதேசவாதம் பொய், போராளிகளைக் கேட்டது பொய், கிழக்கை விட வடக்கை அதிகம் அபிவிருத்தி செய்ததென்ற கோஷம் பொய், கிழக்கின் தனியான விடுதலை என்ற பிரச்சாரமும் பொய். பொய்களுக்கு ஆயுள் சிறிது என்பதை முரளீதரன் புரியாவிட்டாலும், தமிழ் மக்கள் இப்போது புரிந்து கொண்டுள்ளார்கள்.

இறுதியாக முரளீதரனுக்கு விரிந்திருக்கும் இரு வாய்ப்புக்கள், இரண்டே இரண்டு வாய்ப்புக்கள், தெளிவாகத் தெரிகின்றன:

1) பொது மன்னிப்பை ஏற்று, சரணடைந்து, சாவைத் தவிர்த்து ஒதுங்கிக் கொள்வது.

2) நாட்டை விட்டு வெளியேறி, ஈழப் போராட்டத்தை முற்றாகத் துறந்து, தனது மனைவி குழந்தைகளுடன் குடித்தனம் நடாத்துவது.

இந்த இரு வாய்ப்புக்களுக்கும் கூட, அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் காலஅவகாசம் மிக சொற்பமே.

ஏனைய எல்லா முயற்சிகளுமே, தமிழினத்தின் நிரந்தரத் துரோகி என்ற பட்டத்துடன், ஈழத்தமிழர் வரலாற்றில் இன்னுமொரு ஈனப் பிறவியாகப் பதிவுசெய்யப்படும் கோரநிலைக்கே கோலமிடும். ★

---

பார்வைகள்

சுதந்திரதீபன்

# 'சமாதானச் சுருள்' - குறும்படங்கள் — ஒரு பார்வை

அண்மையில் கைலாசபதி கலையரங்கில் ஏழு குறுந்திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இந்த ஏழு படங்களும் இங்கிலாந்தின் 'ஸ்கிறிப்நெற்' அமைப்பின் முயற்சியால் வேறும்பல உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களின் அனுசரணையோடு உருவாக்கப்பட்டவை. இந்த ஏழில் 'போருக்குப் பின்', 'தடை', 'மூக்குப் பேணி', 'செருப்பு', 'அழுத்தம்' ஆகியவை தமிழிலும், 'அதிகாலையில் இருள்', 'ஒளித்துப்பிடித்து' ஆகிய இரண்டும் சிங்களத்திலும் அமைந்திருந்தன.

விழாத் தொடக்கத்தில் வழங்கப்பட்ட கையேட்டில் காணப்பட்ட '....மூன்று சுற்றுக்களிலும் தெரிவாகி இறுதிச்சுற்றில் படமாக்கப்பட்டிருக்கும் ஏழு குறும்படங்களின் தொகுப்பில் - உணர்வுகளின் பரிமாற்றத்திற்கான விபரமஞ்சரியின் தொகுப்பாக்கம் வருமாறு என்ற வசனத்தின் தெளிவற்ற தன்மை, பின்னர் காட்டப்பட்ட சில படங்களின் தன்மைக்கு ஓர் முன்னுரையாக அமைந்ததோ என்று எண்ணத் தோன்றிற்று.

முதலில் காட்டப்பட்ட 'அதிகாலையில் இருள்' என்ற படம் இதற்கு விதிவிலக்கு. ஆனந்த அபேநாயக்கவின் ஆக்கமான இது, தரத்திலும் முதலிடம் பெறுகிறது. போரின் விளைவாகப் பாதிப்புறும் சிறுவர்கள் பற்றிய மனதைத் தொடும் கதை. அதன் மையக்கருத்து சிதைவுறாதவாறு கலைநயத்துடன் படமாக்கப்பட்டுள்ளது. 'சினிமா ஒரு காட்சி ஊடகம்' என்பதை வெறும் வாய்ப்பாடாக மட்டும் பாடாது, அதை உண்மையில் உணர்ந்து - உணர்த்தும் படம். வசனங்களே இல்லை. போர்வீரர்களின் மார்பில் மாலையாய்த் தொங்கும் துப்பாக்கி ரவைகள், அச் சிறுவனின் கழுத்தில் ஊதுகுழல். மாலையாய் உருமாற்றம் பெற்றுத் தொங்குவது அழகான படிமம்.

அடுத்ததாகக் காட்டப்பட்ட 'அழுத்தம்' படம் போர்ச்சூழலுக்கு இயைபாக்கம் அடைவதிலான நேர் விளைவுகளைப் பற்றிய காட்சிப் படுத்தலைத் தருகின்ற குறும்படம் எனக் குறிப்பிடப்படுகிறது. அந்த நேர் விளைவுகள் எவையென்பது தெரியவில்லை. அவற்றை விளக்கமுடியாமல் போவதில் கதாசிரியர்/ இயக்குநரின் இயலாமை பளிச்சிடுகிறது. இன்னும் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். எப்போதும் 'படி படி' என்று பிள்ளைகளை நச்சரிக்கும் தந்தை வெளியில் தொடர்ந்து வெடிக்கும் எறிகணைகளுக்குப் பயந்து பதுங்கிக் கொண்டிருக்கும்போதும் - அதுவும் காற்றின் உதவியால் சுழலும் டைனமோவில் எரிகிற சைக்கிள் விளக்கின் (!) ஒழுங்கற்ற, தெளிவற்ற வெளிச்சத்திலும் 'படி படி' என்பதைப் பார்க்கையில் அந்தப் பாத்திரம் (அல்லது அதை உருவாக்கியவர்) பற்றிய கேள்வி- பார்வையாளர் மனதில் எழுவது தவிர்க்கமுடியாததாகிறது.

நல்ல நடிப்பு, அருமையான ஒளிப்பதிவு போன்றவை இருந்தும் இந்த அடிப்படையில் பலவீனம் (சிலவேளை இதைத்தான் இயைபாக்கம் என்கிறார்களோ) படத்தை அபத்தத்தின் உச்சத்திற்கு இட்டுச்செல்கிறது. தவிர காட்சிக்குக் காட்சி இடம்பெறும் அதிக உரையாடல்களும் படத்தின் பலவீனத்தை அதிகரிக்கின்றன. தந்தையாக வருகிறவர் வீட்டில் 'ரியூஷன்' கொடுக்கிறவராகவும், செக்கு வைத்து எண்ணெய் வடிப்பவராகவும் வருவதும் ஏன் என்று தெரியவில்லை.

'செருப்பு' படம் மூன்றாவதாகக் காட்டப்பட்டது. குறும்படத்திற்கேற்ற அருமையான கதை. செருப்புக்கு ஏங்கும் சிறுமி - அது கிடைக்கும் தருணத்தில் மிதிவெடியில் சிக்கி காலையே இழந்துவிடுகிறாள். இந்தக்கதை படமாக்கப்பட்டபோது, அதன் சுடர்மையை சற்று இழந்து விடுவது, கற்ற உத்திகளை உள்ளடக்க முயன்றதாலோ தெரியவில்லை. எப்படியிருப்பினும் 'செருப்பு' ஒரு நல்ல குறும்படமாக உருவாகியுள்ளது. ஒளிப்பதிவும் பாராட்டும் படியாக அமைந்துள்ளமை இன்னொரு சிறப்பு.

அடுத்துக் காட்டப்பட்ட 'போரின் பிறகு' படம் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன தந்தையைப் பற்றிக் கவலைப்பட்டுப் பாதிப்புறும் சிறுவனதும், அவனது இளந்தாயினதும் உணர்வுகளை மனதைத் தொடும் விதமாகக் கூறுகிறது. எனினும், கடைசிக் காட்சியில் அச்சிறுவன் காவலரணில் இருக்கும் சிப்பாயிடம் போய் அவனைப் பிடித்து உலுக்கி 'அப்பா எங்கே? சொல்லு!' என்று கதறுவது யதார்த்தத்திற்கு மாறான ஒன்றாகவே படுகிறது.

ஐந்தாவதாகக் காட்டப்பட்ட படம் 'மூக்குப் பேணி' என்பது. பண்பாட்டு அடையாளங்கள் விலைபோகாமல் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய குறும்படம் என இது விபரமஞ்சரியில் குறிப்பிடப்படுகிறது. எனினும் அந்த விழிப்புணர்வைக் கதையில் காணவேயில்லை. பையன், மூக்குப்பேணியைத் திரும்ப வாங்குவது தாத்தாவின்பால் கொண்ட பரிவினாலேயே அன்றி, பண்பாட்டு விழிப்புணர்வினால் அல்ல. 'மூக்குப் பேணியில் தண்ணி தா' என்று அவதிப்படும் கிழவர் - அந்த அந்தரத்துக்கு வேறு பாத்திரத்தில் தண்ணி கொடுத்திருந்தால் குடித்திருக்கமாட்டாரா? சிறுவனின் மனமாற்றத்திற்காக கதாசிரியர் காட்டும் காரணம் வேடிக்கையானது. தவிர, தாத்தா இறந்துவிடுகிறாரா இல்லையா என்பதும் தெளிவாயில்லை. பத்துப் பதினொரு வயது சிறுவன் அரிச்சுவடிப் புத்தகத்தை புரட்டிக் கொண்டிருப்பது யாரைப் 'பேய்க் காட்ட' (அம்மாவையா, பார்வையாளர்களையா?) என்பது தெரியவில்லை.

'ஒளித்துப் பிடித்து' என்ற இன்னொரு சிங்களப் படம் ஆறாவதாகக் காட்டப்பட்டது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமிலிருந்த கைதிகளின் மீதான தாக்குதலைப் பின்புலமாகக் கொண்டு, அந்தத் தாக்குதலில் இருந்து தப்பித்துவரும் ஒரு கைதியையும், அவன் ஒளிந்திருக்கும் வீட்டிலுள்ள சிறுமியையும், அத தாக்குதலில் பங்கேற்ற அவளது தந்தையையும், அவனது நண்பனையும் மையப்படுத்தி இக் குறும்படம் நகர்கிறது. என்றாலும், மற்றச் சிங்களப்படத்தில் பெற்ற நிறைவை இது தருவதாயில்லை. அதிக உரையாடல்களும், அவற்றின் பயனாய் அடிக்கடி கவனத்தைத் திசை திருப்பிய உப தலைப்புக்களும் முக்கிய காரணமாயிருக்கலாமென்று படுகிறது.

இந்த உரையாடல் பற்றிய நெருடல் அடுத்துக் காட்டப்பட்ட ஏழாவது படமான 'தடை'யிலும் உணரப்படுகிறது. பொருளாதாரத் தடையின் நேரடி விளைவான மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு எவ்வாறு ஒரு வறுமைக் கோட்டிலுள்ள குடும்பத்தைப் பாதிக்கிறது என்பதை உணர்வுரீதியாக காட்சிப் படுத்த முயல்கின்ற படம் இது.

ஏழு படங்களையும் பார்த்து விட்டு வெளியே வருகையில் நிறைவு தருகின்ற விடயம் இவை. 'அதிகாலையில் இருள்', 'செருப்பு' படங்கள் அநேகமான நடிகர்களின் இயல்பான நடிப்பு மற்றும் டயஸின் ஒளிப் பதிவு. ஐந்து தமிழ்ப்படங்களில் 'அழுத்தம்', 'போருக்குப் பின்', 'மூக்குப்பேணி' ஆகிய மூன்றும் உத்திகளை உள்வாங்கி எழுதப்பட்டு, இறுதிச்சுற்றுவரை தெரிவாகி வந்திருந்தன என்றால், அதன் காரணம் எம் வாழ்நிலை பற்றிய புரிந்துகொள்ளல் அற்ற வெளியார் தன்மையா அல்லது வேறேதும் அழுத்தமா?

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து. திருக்குறள்

# நமது நோக்கு

## மக்கள் தீர்ப்பே... தேர்தல் முடிவு...

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் பெருமளவு வன்முறைகள் அசம்பாவிதங்களோ இன்றி அமைதியாக நடைபெற்றதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது ஓரளவு திருப்திகரமான விடயம்தான். கடந்த பொதுத் தேர்தல் இதற்கு நேர்மாறாக பெருமளவு வன்முறைச் சம்பவங்களுடன் ஜனநாயக விரோத செயற்பாடுகளுடனும், நடைபெற்றதுடன் இந்த வன்முறைச் செயற்பாடுகளில் அப்போது, ஆட்சியில் இருந்த அரசின் அமைச்சர்கள் ஒருசிலரும் அரச படையினரும்கூட ஈடுபட்டிருந்தனர் என்பதுடன், இந்தத் தேர்தல் சட்டவிரோத செயற்பாடுகள் - அராஜகங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் இன்னமும் முடிவடையாமல் இருக்கின்றது என்பதும், குறிப்பிடத்தக்கது.

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிப்புக்கூட ஜனாதிபதி மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை ஒன்றையடுத்து, மேற்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும்.

ஜனநாயக ரீதியில், மக்களின் ஆதரவுடன், ஆட்சிபீடம் ஏறிய ஒரு அரசாங்கத்தை, தகுந்த காரணங்கள் ஏதுமின்றி, நியாயபூர்வமற்ற அதிகார வலுவைப் பயன்படுத்தி ஜனாதிபதி கலைத்தமையானது அப்பட்டமான அரசியல் சுயநலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை என்பதை, அனைவரும் உளமாறப் புரிந்துகொண்டபோதும், மக்களால் அதனை எதிர்த்து எதனையும் செய்யமுடியாது போய்விட்டது என்பதும், நிஜமே...

இது இலங்கையின் அரசியல் யாப்பிலுள்ள, ஒருவிதமான தனிமனித சர்வாதிகார ஆட்சியதிகாரத்தில் அங்கீகாரம் வழங்கும் விதிமுறை காரணமாக ஏற்பட்டுள்ள ஜனநாயகத்திற்கு ஆபத்தான அம்சமாகும்.

எதுவானாலும் தற்போதுள்ள அரசியல் ஆட்சிமுறையிலுள்ள இப்படியான ஜனநாயகத்தை கேலிசெய்யும்- மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை தன்னிஷ்டத்திற்கேற்ப நிராகரித்து - ஒதுக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மாற்றப்பட்டு நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்கள் கையளிக்கப்படாதவரை, இலங்கையை ஒரு முழுமையான ஜனநாயக நாடாக அடையாளப்படுத்த முடியாது.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் எப்படி வந்தாலும் - தற்போதைய அரசியல் யாப்பு மாற்றப்படாத வரைக்கும் எந்தக்கட்சி ஆட்சிப்பீடத்தைப் பிடித்தாலும் தற்போதைய ஆட்சிமுறையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாது என்பது உறுதி.

மீண்டும் ஐக்கிய தேசியமுன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் என்று வைத்துக்கொண்டாலும் இலங்கையில் தொடர்ந்தும் தற்போதுள்ள இரட்டை ஆட்சி நிலையே தொடரும் என்பதில் ஐயமில்லை.

மாறாக சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிபீடம் ஏறினாலும் தட்டிக்கேட்க ஆளில்லாத அளவுக்கு அதிகார வலுமிக்க ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சிமுறையொன்றே தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, யார் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை என்பது பெருமளவிற்கு எந்தவித மாற்றத்தையும் காணப்போவதில்லை என்பதே உண்மையாகும்.

இன்று மதியத்தின் பின்னர் இந்தத் தேர்தலில், மக்கள் யாரை நாடாளுமன்ற ஆட்சித்தலைவராக தேர்வு செய்துள்ளார்கள் என்பது பெரும்பாலும் தெரிந்துவிடும்.

அதேபோல், வடக்கு - கிழக்கு வாழ்மக்களும் தங்களின் உரிமைகளின் அடிப்படையிலான சமாதானம் மீதான உறுதிப்பாட்டை உலகிற்கு உணர்த்த இம்முறை முதல் தடவையாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்தியுள்ளனர் என்றே கூறவேண்டும்.

இந்தத் தேர்தல் முடிவுகளின் அடிப்பைடையிலேயே நாட்டின் சமாதானம் குறித்த எதிர்காலம் தங்கியுள்ளது என அரசியல் நோக்கர்கள் கருதுவதாகவும், அதேசமயம் சர்வதேச சமூகம் இதனை உன்னிப்பாக அவதானித்துவருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தல் முடிவுகள் சிறிலங்காவின் அரசியல் ஸ்திரத்தன்மையை இம்முறையாவது உறுதிப்படுத்துமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்தக்கேள்விக்கான விடையும் இன்று மாலைக்குள் தெரிந்துவிடும்.

இந்த விடை சமாதானம், அமைதி, அரசியல் ஸ்திரத்தன்மை குறித்த மக்களின் கருத்து நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதாகவும் இருக்கவே செய்யும்.

## நாடும் நடப்பும்




### யாழ். குடாநாட்டில்

# பொலிஸாருடன் இராணுவத்தினரும் நேற்று பாதுகாப்புப் பணிகளில்

யாழ். குடாநாட்டுப் பகுதிகள் எங்கும் தேர்தலை முன்னிட்டு பொலிஸார், இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இருந்தது.

வீதியெங்கும் பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். யாழ்.நகரை அண்டிய உணவகங்கள், மருந்தகங்கள் தவிர, அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டு, நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. மக்கள் வாக்களிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களில் காலை 7.00 மணிமுதல் மக்கள் வாக்களிக்க ஆரம்பித்துவிட்டனர். காலை 11.00 மணியளவில் பெருமளவான மக்கள் வாக்களிப்பதற்காக அநேகமான வாக்களிப்பு நிலையங்களில் வரிசையாக நின்றனர். வாக்களிப்பு நிலையங்களிலிருந்து அதிகாரிகளும் பொலிஸாரும் சந்தேகத்திற்கிடமான நபர்களை விசாரித்து, நீதியான தேர்தல் ஒன்றை நடத்தி யாழ்.குடாநாட்டுப் பகுதியில் செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

வீதிகள் எங்கும் பாதுகாப்புக் கடமையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். பொலிஸ் அதிகாரிகள் - சில வாக்களிப்பு நிலையங்களுக்குச்சென்று பார்வையிட்டனர். இவற்றைவிட, தேர்தல் கண்காணிப்பாளர்களும் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# தேர்தல் தினமான நேற்றுவரை 1409 வன்முறைச் சம்பவங்கள்

(கொழும்பு)

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து வாக்களிப்பு இடம்பெற்ற நாளான நேற்றுவரை - ஆயிரத்து 409 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்றுக் காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்துக்குள் 38 வன்முறைகள் நடைபெற்றன.

தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்புக்குழு, இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (01)

# தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

கனிஷ்ரநிலை தேசிய மெய்வல்லுநர் போட்டி மே மாதம் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தத் தேசியமட்டப் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றவிரும்பும் மெய்வல்லுநர்கள்- யாழ்.மாவட்ட மெய்வல்லுநர்கள் சங்க பிரதேச செயலாளர்களுடனோ அல்லது யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகளுடனோ தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி கேட்டுள்ளார்.

கனிஷ்டநிலை தேசிய மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் - பாடசாலை ஊடாகவும், கழகங்கள் ஊடாகவும் தொடர்புகொள்ளமுடியும். யாழ்.மாவட்ட மெய்வல்லுநர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு - ஏப்ரல் 9 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதால், அதற்கு முன்பு தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### பூநகரி பிரதேச செயலர் பிரிவில்

# கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்

(ஆழியவளை)

பூநகரிப் பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி- கடந்த ஞாயிற்றுக்கிழமை 'எவரெடி' விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டார்.

இந்தப் போட்டிகளில் 'எவரெடி' விளையாட்டுக் கழகம் 204 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், 'செந்தாரகை' விளையாட்டுக் கழகம் -174 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அசந்தனா விளையாட்டுக் கழகம் - 83 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரராக 'எவரெடி' விளையாட்டுக் கழகத்தின் யோ.முகுந்தனும், சிறந்த வீராங்கனையாக 'அண்ணா' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டினோயாவும் தெரிவாகினர். (122)

### வடக்கு - கிழக்கில்

# சேதமுற்ற பாடசாலைகளை புனரமைக்க 73 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போர் அனர்த்தங்கள் காரணமாகச் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு, மத்திய கல்வி அமைச்சு 73 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியிலிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 86 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளதாக பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளர், பொறியியலாளர் எஸ். கே.விநாயகரட்ணம் தெரிவித்தார்.

போர் அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன், அடிப்படை வசதிகள் இல்லாத பாடசாலைகளின் மலசலகூடம், கிணறு, நூல்நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஆண்டு வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் காரணமாகச் சேதமடைந்த பாடசாலைகளைத் தெரிவுசெய்து, அவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

பொதுநோக்கு - எஸ்.ஜெயா

# தென்மராட்சியில் உக்கிரமடைந்த கொள்ளைச் சம்பவங்கள்

தென்மராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக - கொள்ளை, கொலை, வன்முறை என்பன மிகவும் உக்கிரமடைந்து செல்லும் போக்கில் காணப்படுகிறது. பெப்ரவரி 21 இல் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நடந்த பாரிய நகைக்கொள்ளை அனைவரையும் திகிலடையச் செய்துள்ளது.

கொள்ளையிடும் முறையில் பல்வேறு வகையினை கொள்ளையர் கையாள்வது வழக்கம். அவை வன்முறைக் கொள்ளைகள், மென்முறைக் கொள்ளைகள் எனும் இரு பகுதிக்குள் பலமுறைகளைக் கொண்டிருக்கும்.

இந்தக் கொள்ளையானது வன்முறை சார்ந்த, 'அதிரடி'க் கொள்ளையாகும். இந்தக் கொள்ளையின்போது கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் வந்தவுடன் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டு, இருவரைக் காயப்படுத்திவிட்டு, சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியுள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தக் கொள்ளையர்கள் இராணுவச் சீருடையில் காணப்பட்டதோடு, சாதாரண சிவிலியன்கள் பயன்படுத்தும் ஹீரோ ஹொண்டா, எம்.டி. 90 போன்ற மோட்டார் சைக்கிள்களையும் பாவித்ததோடு, முகத்தினைக் கறுப்புத் துணியினால் மூடிக்கொண்ட ஆயுததாரிகளாகவும் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் பல்வேறு சந்தேகங்களை இந்தக் கொள்ளை தொடர்பாகக் கிளப்பிவிடுகின்றது.

1) இராணுவச் சீருடையில் காணப்பட்டதாலும், ஆயுதம் ஏந்திய நபர்களாகவும் இருந்தமையால் இவர்கள் இராணுவத்துடன் நேரடியாக மறைமுகத் தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது -

2) இராணுவச் சீருடைகள் வெளிச் சந்தையில் தாராளமாகக் காணப்படுவதால், பொதுக் கொள்ளையர்கள் இதனைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். அல்லது -

3) யாழ். மாவட்டத்தில் பொது மக்களின் மற்றும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளதால், இவை இராணுவத்தின் அல்லது மாற்று இயக்கங்களின் கைகளில் இருந்தே கொள்ளையர்களுக்கு கிடைத்திருக்கவேண்டும்.

இப்படிப்பட்டவர்களின் ஏதாவது ஒரு பிரிவினரின் தொடர்பின் மூலமே இந்தக் கொள்ளை இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய அடிப்படைகளைக் கொண்ட கொள்ளை பின்வரும் சூழ்நிலைகளால், நகர்த்தப்பட்டிருக்கலாம்.

1) இந்தக் கொள்ளையினை - தொடர்ச்சியாக அவதானித்த ஆயுதம் சார் பிரிவினரால் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது -

2) இந்தக் கடையில் தொழில்புரியும் ஊழியர்களின் பின்னணித் தொடர்புகள் மூலம் செயற்படுத்தப்பட்ட ஓர் நாடகமாக அமையலாம் அல்லது -

3) தொழிற்போட்டியால் ஏற்பட்ட பகைமையினைத் தீர்த்துக்கட்ட இத்தகைய (பொது அல்லது ஆயுதம்சார்) கொள்ளையர்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

எனவே, இவற்றின் அடிப்படையில் விசாரணைகள் நகர்த்தப்படுகின்றபோது இவற்றில் ஒன்று அல்லது பல உண்மையாகக் காணப்படவேண்டிய கட்டாயம் உள்ளது எனலாம்.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 24 இல் வரணியில் நட்டநடு நிசியில் மென்முறை சார்ந்த பொருட்கொள்ளை ஒன்று இடம்பெற்றுள்ளது. இராசையா ஸ்ரீதரன் என்பவர் வீட்டில் புத்தம்புதிய ரேப் றெக்கோடர் (7500 ரூபா), ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி ஒலிப்பதிவு நாடா என்பன உட்பட சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளன.

இங்கு வீட்டிலிருந்த எவருக்கும் எந்தவித தாக்குதலும் மேற்கொள்ளாது, அவர்களை உளவியல் ரீதியான தாக்குதலுக்கு உட்படுத்தி விட்டுத் திருடர்கள் தம் கைவரிசையினைக் காட்டியுள்ளனர்.

இதே தினத்தில், இதே நேரத்தில், இதே இடத்தைச் சேர்ந்த - வினாசி பரமு என்பவர் வீட்டில் மென்முறை சார்ந்த 'விடாய்' (Need) திருட்டு கையாளப்பட்டுள்ளது. (விடாய் என்பது தேவையினைக் குறிக்கும். சிறு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு செய்யப்படும் திருட்டு). அதாவது, இங்கு உட்புகுந்த திருடர்கள் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிளின் இரு கண்ணாடிகளையும் கழட்டி எடுத்ததுடன், அவர்களின் சேட் பொக்கற்றில் காணப்பட்ட சிறு தொகைப் பணத்தையும் எடுத்துக்கொண்டு தேசிய அடையாள அட்டையையும், பணப் பையையும் தெருவில் வீசியுள்ளனர். இதற்கான முறைப்பாட்டுப் பதிவுகள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் காணப்படுகின்றது.

இதேயிடத்தில் பெப்ரவரி 25 ஆம் திகதி- திருடர்கள், கந்தையா தியாகராசா என்பவர் வீட்டில் 'உளவியல் சார்ந்த அதிரடித் திருட்டு முறையினைப்' பயன்படுத்த முயற்சித்திருக்கின்றனர்.

இவர்கள் இதன் முதற் கட்டமாக 'உளவியல் குண்டினை' (Psycho Bomb) தாக்குதலுக்குப் பயன்படுத்தியிருக்கின்றனர். இங்கு உளவியல் குண்டு என்பது, திருடர்கள் வெளியே நின்று கொண்டு தமது நடமாட்டத்தினைத் தெரிவித்து, அச்சப்படுத்தி திருட்டினை மேற்கொள்வதாகும். இதன்மூலம், அச்சம்கொண்ட மக்கள் திருடர்களை விரட்ட அந்த இடத்திற்கு விரைகின்றபோது ஆட்களற்ற வீடுகளில் புகுந்து இலகுவாகத் திருட்டை மேற்கொண்டு விடுகின்றனர். இவற்றினை விடவும் சில உளவியல் ரீதியான ஆயுதங்களைப் பயன்படுத்தி எதிர்ப்பின்றி இலகுவில் திருட்டினை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறே, இந்தப் பகுதியில் மண் கொள்ளைகளும் பரவலாக இடம்பெறுகின்றன. இவற்றினைத் தட்டிக் கேட்பவர்கள் அச்சுறுத்தப்படுவதால் பெருமளவு பொதுமக்களுக்குச் சொந்தமான மேட்டு நிலங்கள், ஒன்றுக்கும் உதவாத குன்றும் குழியுமாகக் காட்சி தருவதோடு, இந்தக் காணிகளில் காணப்படுகின்ற பனை வளங்களும் பாழாய்ப் போகின்றன. இதற்கு இன்று யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள கைத்தொலைபேசிகள் நன்றாகக் கைகொடுக்கின்றன.

இவ்வாறான திருட்டுக்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் சுமார் 12 - 24 வயது வரையான சிறுவர்களாக இருப்பது கவலைக் குரிய விடயமாகும். நேரில் கண்ட சாட்சிகளும் சரி, தடயங்களும் சரி திருட்டுச் சம்பவத்தில் இத்தகைய வயதுடையவர்களைப் பெருமளவில் இனம்காட்டுகின்றனர். இதற்குப் பெரியவர்களின் வழிகாட்டுதல்களும் தொடர்பும் உண்டு. இத்தகைய பின்னணிகள் ஆராயப்படவேண்டிய வையாகும்.

இத்தகைய ஓர் நிலைக்கு பல்வேறு காரணப் பிழிவுகள் பின்னணியாக அமைகின்றன. இத்தகைய விடலைப் பருவத்தில் இவர்களின் வயதுக்கு அதிகமான முதிர்ச்சியான செயல்களில் (மது, புகைத்தல், போதை) ஈடுபடுவதால், இத்தகைய செலவுகளைச் சமன் செய்யமுடியாது போகவே, இவர்கள் இப்படிப்பட்ட ஓர் சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றனர் என்பது எல்லோராலும் கூறப்படும் பொதுவான கருத்தாகும்.

மேலும், இவை மட்டுமல்லாது அவர்களின் குடும்பப் பின்னணியும் இதற்குக் காரணமாக அமைவதோடு, புறச் சூழலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது, பக்கத்து வீட்டிலிருக்கும் ஒருவன் வெளிநாட்டுத் தொடர்பால் அதிக ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றபொழுது, இதே வயதையொத்த வசதி குறைந்தவர்கள் மத்தியில் பாரிய உளவியல் தாக்கம் ஒன்று உருப்பெறத் தொடங்கி, இத்தகைய வன்முறைப் பிழிவுகளை உண்டாக்கிவிடுகிறது எனலாம்.

> **பக்கத்து வீட்டி லிருக்கும் ஒருவன் வெளிநாட்டுத் தொடர்பால் அதிக ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்ற பொழுது, இதே வயதையொத்த வசதி குறைந்தவர்கள் மத்தியில் பாரிய உளவியல் தாக்கம் ஒன்று உருப் பெறத் தொடங்கி, இத்தகைய வன்முறைப் பிழிவு களை உண்டாக்கிவிடுகிறது என்று ....**

எனவே, இத்தகைய திருட்டைத் தடை செய்யும் நோக்கோடு, ஊர்ப் பாதுகாப்பு என்னும் வகையிலும் தென்மராட்சியில் சில இடங்களில் 'விழிப்புக் குழு' எனும் பெயரில் சில குழுக்கள் இயங்கத் தொடங்கியுள்ளன.

இவற்றில் பெரும்பாலானவை சட்டரீதியற்ற (கிராமசேவகர் உத்தரவு பெறாத) குழுக்களாகவே காணப்படுகின்றன. இதனால், இவற்றினால் ஏற்படக்கூடிய தவறுகளுக்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய கடமை யாருடையது என்பது மக்களின் கேள்வியாகும். மேலும் இத்தகைய (அனுமதிபெறாத) நடவடிக்கைகள் இவர்கள் மீது சந்தேகம் ஊட்டுவதாகவே அமைகின்றது எனலாம்.

இத்தகைய நடவடிக்கைகள் தோற்றம் பெறுவதற்கு யாது காரணம் என்று நோக்குகையில், அரசின் திறனற்ற பொலிஸ் நிர்வாகமே காரணமாக அமைவதாகப் பொது மக்கள் கருதுகின்றனர். ஏனெனில், பல திருட்டுச் சம்பவங்கள் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்படுகின்ற போதும் திருடர்கள் தமது செல்வாக்கினைப் பிரயோகித்து இலகுவாகத் தப்பித்துக் கொள்கின்றனர். இதற்கு பிரதான காரணமாக அமைவது, இலஞ்ச - ஊழல் இத்துறையில் தலைவிரித்து ஆடுவதே ஆகும்.

இதற்குக் உதாரணமாக - கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றினை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதாக அமையுமென எதிர்பார்க்கின்றேன்.

வரணி தாவளை இயற்றாலையில் - விளக்கொளியில் க.பொ.த (சா/த) மாணவர்கள் அப்பகுதி அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருக்கையில், இதே இடத்தினைச் சேர்ந்த வன்முறைக் கும்பல் ஒன்று மோட்டார் வண்டிகளில் சென்று ( சுமார் 18-24 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள்) விளக்குகளை அடித்து நொருக்கியதோடு கல்வி கற்றவர்களையும் தாக்கிவிட்டுச் சென்றனர். அப்போது இவர்கள் நிறைபோதையில் காணப்பட்டதாகச் சாட்சிகள் கூறுகின்றன.

ஆனால், இத்தகைய சம்பவம் தொடர்பாக சென்று குற்றவாளிகள் இனங்காட்டப்பட்ட போதும், அவர்கள் தமது உயர் செல்வாக்கினைப் பயன்படுத்தி (இலஞ்ச - ஊழல்) தாராளமாகத் திரிகின்றனர். இப்பொழுதும் அக்குழுவின் பல நடவடிக்கைகள் வன்முறைப் பதிவுகளைப் கொண்டதாகவே காணப்படுகின்றன.

எனவே, இத்தகைய நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நேர்மையான, நீதியான விசாரணை மன்றங்கள் அல்லது குழுக்கள் அல்லது தனிநபரோ காணப்படுதல் சிறந்ததாகும். எமது' அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால், இந்தியாவில்- 'புலனாய்வுத்துறை' கற்கையானது பல்கலைக் கழக மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதால், அதனைக் கற்று வெளியேறிய பல பட்டதாரிகள் தனியாகவும், குழுவாகவும் - குடும்ப மற்றும் சமூகத் தகராறுகளை, அதன் பின்னணிகளை இனங்காண உதவுகின்றனர்.

இவர்களது விசாரணை முடிவுகளை பொலிஸ், மற்றும் நீதிமன்றங்கள் தமது தீர்விற்கு ஆதாரமாகக் கொள்கின்றன. இத்தகைய முறைகள் பல மேலை நாடுகளிலிருந்து பிரபல்யம் பெற்றிருக்கின்றன.

எனவே, இப்பிரதேசங்களில் காணப்படும் ஊழல், விசாரணைத் தாமதம் என்பனவற்றைப் போக்கவும், நீதியான பக்கச் சார்பற்ற முறைகளைப் பின்பற்றவும் - தனியார் புலனாய்வுத்துறையினை உருவாக்குதல் மிகமிக அவசியமானதொன்றாகும்.

இத்தகைய முயற்சிகளில் பல்கலைக் கழகங்கள், மற்றும் உயர் கல்லூரிகள் என்பனவே ஈடுபடவேண்டும். என்பதுடன் சட்ட மற்றும் நிர்வாகத்துறைகளின் அங்கீகாரம் வேண்டும் என்பதாகும்.

இன்று எமது மண்ணில் சட்டபூர்வமற்ற புலனாய்வாளர்கள் மற்றும் அத்துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். இவர்களை நீதித்துறையோ அல்லது நிர்வாகத்துறையோ அங்கீகரிப்பதனூடாக - பெருமளவான இளைஞர்கள் தமது சொந்தக் காலில் நிற்பதற்கான பொருளாதார வசதிகள் கிடைப்பதுடன், நீதியானதும் விரைவானதுமான தீர்வுகள் கிட்ட வழிகிடைப்பதோடு, பெருமளவான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் துறையாகவும் வளர்ச்சிகாணும் எனலாம்.

எனவே, இன்றைய நிலையில், எது எவ்வாறாக இருந்தபோதும் தென்மராட்சியில் இடம்பெறும் தொடர் கொள்ளைகளும், திருட்டுக்களும், வழிப்பறிகளும், தடுக்கப்படுதல் வேண்டும் என்பது முக்கியமானதொரு நிலைமையாகும்.

திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டினை ஒழிப்பது கடினம் எனக் கருதப்படுவதுண்டு. ஆகவே, சிறுவர்களை (18 வயதுக்குக் குறைந்த) தனியாக மோட்டார் சைக்கிளில் பயணம் செல்வதனை எந்தப் பெற்றோரும் அனுமதிக்கக்கூடாது. என்பதோடு, இவர்களின் இரவு நட மாட்டங்களின் போது (பி.ப 7.00 மணிக்குப் பின்பு) கூடவே வயது வந்த உறவுக்காரர் அல்லது பெற்றோர் இருக்க வேண்டும் என மேலை நாடுகளைப் போல சட்டங்கள் கொண்டு வருதல் மிகமுக்கியமானதாகும். இதன் மூலம் வன்முறைகளை குறைப்பதுடன் ஆரோக்கியமான ஒரு சமுதாய உற்பத்திக்கும் வித்திடலாம். ☆

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி XXXIX - சிவா சின்னப்பொடி

# அந்நிய தேசம் சென்று 'ரமிள்ஸ்' ஆகிய தமிழர்கள்

அடுத்தபடியாக தலைமைத்துவப் பண்பு இல்லாமைக்கு - பிள்ளைக்கும் பெற்றோருக்குமான உறவு என்பது தமிழ் சமூகத்தில் ஒருவழித் தன்மை கொண்டதாக இருப்பது. பெற்றோர் சொல்வதைப் பிள்ளை கேட்டே ஆகவேண்டும். பிள்ளையின் விருப்பங்கள், அதனுடைய தேவைகள், அதனுடைய பிரச்சினைகளை அறிவதற்கு பெற்றோர்கள் நேரத்தை செலவிடாததும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. ஐரோப்பிய பெற்றோர் தமது இரவு உணவுகளை பிள்ளைகளுடன சேர்ந்து ஒரே மேசையில் அமர்ந்து உண்பது வழக்கம் என்றும் அவ்வாறு உண்ணும்போது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான இரு வழிக் கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது என்றும் தமிழ் பெற்றோரிடத்தில் இந்த பழக்கம் இல்லாதது ஒரு பெரும் குறைபாடு என்றும் கூறப்பட்டது.

சொல்வதைக் கேட்டுச் செய்யும் பழக்கமும் தானாகச் சிந்தித்துச் சுயமாக முடிவெடுக்கப் பழக்கப்படாமையும் தலைமைத்துவப் பண்பு இல்லாமைக்கு முக்கிய காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து போன்ற நாடுகளின் கல்விமுறை முழுக்க முழுக்க பிள்ளைகளின் ஆளுமையை வளர்ப்பதாகவும்- அவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் போது ஓரளவுக்காவது முழுமைபெற்ற மனிதர்களாக தொழில்சார் அறிவு உள்ளவர்களாக வரத்தக்க விதத்தில் அமைந்திருக்கின்றது.

ஆங்கிலக் கல்விமுறை என்பது இதற்கு மாறாக - பட்டதாரிகளை உருவாக்கும் (காகித பட்டத்தை வைத்துக்கொண்டு வேலைக்கு அலையும்) கல்விமுறையாக பெரும்பாலும் இருந்துவருகிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் துறைகளைப் பொறுத்து 7,8 வருடங்கள் என்றால் இங்கிலாந்தில் 4 அல்லது 5 வருடங்களில் பொறியியல் பட்டம் பெற்றுவிடலாம். (நமது நாட்டில் உள்ளது ஆங்கிலக் கல்விமுறையே)

நம்மவர்களில் பலருக்கு இந்தக் கல்வி முறைகளில் உள்ள வேறுபாடு மற்றும் பிள்ளைகளுடைய ஆளுமை, தலைமைத்துவப் பண்பு இவைகள் பற்றி எல்லாம் அக்கறை இருக்கவில்லை. பிரெஞ்சு, டொச் மொழிக் கல்வி - டேட்டி கல்வியாகவும், ஆங்கிலக் கல்வி என்பது புனிதக் கல்வியாகவும் இருந்தது.

இந்த எண்ணம் - 1995 களின் பிற்பகுதியில் பல குடும்பங்களை லண்டனுக்கு புலம் பெயரச் செய்தது. 'பிள்ளைகளை இங்கிலீசிலை படிப்பிக்கிறதுக்காக நாங்கள் லண்டனுக்குப் போறம்' என்று சொல்வது - இந்தக் காலகட்டத்தில் ஒரு பஷனாக இருந்தது.

இவ்வாறு அங்கு போய் சேர்ந்தவர்களெல்லாம் சீமைப் பேறு பெற்ற தமிழர்களாகவும் - மற்ற நாடுகளில் தமது பிள்ளைகளைக் கல்வி கற்பித்த தமிழர்கள் டேட்டி தமிழர்களாகவும் பார்க்கப்படும் ஒரு நிலையை உருவாக்கியது.

காலணித்துவம் ஒழிந்து முக்கால் நூற்றாண்டு காலம் சென்றுவிட்டாலும் இன்னும் ஆங்கிலம்தான் உலக மொழி. அதன் மூலம் தான் நாங்கள் பலதைப் பார்க்கலாம் என்கிற எஜமான விசுவாச சிந்தனைப் போக்கு நம்மவர்களிடம் மாறவில்லை.

இன்றைய நவகாலனித்துவ - உலகமயமாக்கல் காலகட்டத்தில் பிரெஞ்சு, டொச், ஸ்பானிஷ் மொழிகளும் - ஏன் ஜப்பான், சீன மொழிகளும் கூட தங்கள் மொழிகளை உலகை சுரட்டுவதற்கான திறவுகோல்களாக ஆக்கி, ஆங்கிலத்தின் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை சுருக்கிவிட்டன.

ஐரோப்பாவில் உள்ள நாடுகளில் ஒன்று டென்மார்க், அந்த மக்களின் மொழி 'டெனிஷ்'- அதுபோலவே கொலண்ட் எனப்படும் நெதர்லாந்தும். அந்த நாட்டு மொழி 'டச்சு'.

இந்த நாடுகளில் மக்கள் தங்கள் மொழிகள் மிகச் சிறுபான்மை மொழிகள் என்றோ, ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சிலோ, டொச்சிலோ படித்தால்தான் தங்கள் பிள்ளைகளுக்கு எதிர்காலம் இருப்பதாக நினைக்கவில்லை. அந்த இரு நாடுகளிலும் அவர்களது தாய் மொழியில்தான் - (டெனிஷ் - டச்சு) கல்வி கற்பிக்கப்படுகின்றது.

இதனால் அந்த நாடுகள் எந்த விதத்திலும் பின்தங்கிவிடவில்லை. அந்த நாட்டு பிள்ளைகள் ஆங்கிலத்தில், பிரெஞ்சில், டொச்சில் படித்த பிள்ளைகளைவிட அறிவில் குறைந்துவிடவில்லை. (தொடரும்)

# சூடானில் இடம்பெறும் மனிதப் படுகொலைகளை நியூயோர்க் மனித உரிமை அமைப்பு கண்டனம்!



நியூயோர்க்கை மையமாகக் கொண்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பொன்று - சூடானின் தென்பகுதியான டார்பூரில் அந்நாட்டு அதிகார சபையினால் நடத்தப்படும் மனிதப் படுகொலைகளைக் கண்டித்துள்ளது.

சூடானிய அரசிற்கும், போராளிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த நிலையில் மனித உரிமை அமைப்பு இந்தக் கருத்தினை வெளிப்படுத்தியிருக்கிறது.

சூடானிய தென்பகுதியான டார்பூருக்கு உதவிப்பணி நிறுவனங்கள் செல்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்படாவிடின் அந்தப் பிரதேச மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கவேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

டார்பூர் பிரதேசத்தில் வாழும் மக்கள்மீது - கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகியவற்றை அரச படையினரும், அரசு சார்பான குழுக்களும் இணைந்து மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்கள் அந்தப் பிரதேசத்தில் போராடிவரும் போராளிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பிரதேசத்திலிருந்து முற்றாகவே அவ்வின மக்களை அழித்து விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இந்தச் சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்டித்துள்ளது.

பெணகள் தொடர்ந்து கற்பழிக்கப்பட்டுவருவதுடன், சிறுவர்கள் கடத்தப்பட்டு, கிராமங்கள் எரியூட்டப்படுகின்றன. மேலும் தானியக்களஞ்சியங்கள் தீவைக்கப்படுவதுடன், குடிநீர் அசுத்தமாக்கப்பட்டும் வருகின்றது. இறந்த உடல்களை கிணறுகளுக்குள் வீசிவிடுவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மனித உரிமை அமைப்புக்களின் கருத்துக்கள் தவறானவையென சூடானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# புதிதாக மேலும் ஏழு நாடுகள் நேட்டோ அமைப்பில் இணைப்பு



நேட்டோ அமைப்பில் மேலும் 7 நாடுகளை அங்கத்தவர்களாக புதிதாக இணைத்துக் கொண்ட நிகழ்வு, புறுசல்சில் நடத்தப்பட்டுள்ளது. பல்கேரியா, எஷ்தோனியா, லட்பியா, [illegible]துனேசியா, ரோமானியா, அலோவாகியா, அலோவேனிய ஆகிய நாடுகள் புதிதாக நேட்டோ[illegible]டன் இணைந்துள்ளன.

இதனால் இந்த நாடுகளின் தேசியக் கொடிகளும் நேட்டோவின் தலைமைக் காரியாலயத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. புதிய அங்கத்தவர்களுடன் நேட்டோவின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விழாவில் புதிய நாடுகளின் கொடியேற்ற வைபவம் அந்நாடுகளின் தேசிய கீதங்களுடன் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெல்ஜியம் நாட்டின் எப் 16 விமானங்கள் போல்ரிக் நாடுகளின் வான்பரப்பில் பறக்க ஆரம்பித்துள்ளன. இதன்மூலம் போல்ரிக் நாடுகளின் கூட்டுப்பாதுகாப்பிற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறியமுடிந்தது.

நேட்டோ படையினர் போல்கன் நாடுகளில் சமாதானப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். ஈராக்கிலும் பணிகளைத் தொடர்வதற்கு பேச்சுக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

அண்மையில் மெடிரேனியன் கடலிலும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நேட்டோவின் போர்க்கப்பலொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க பிரஜைகளை கொன்றவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள்!

## ஈராக்கிற்கான அமெரிக்க அதிகாரி கூறுகிறார்

ஈராக்கின் பலூஜா நகரில் கொலைசெய்யப்பட்டு உடற்பாகங்கள் துண்டாக்கப்பட்ட அமெரிக்க பாதுகாப்புப் பணியாளர்களின் கொலையாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தப் போவதாக ஈராக்கிற்கான அமெரிக்க அதிகாரி போல் பிறீமர் தெரிவித்தார்.

அமெரிக்க கூட்டுப்படையினர் பலூஜா நகருக்குச் சென்று தேடுதல் முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்கப் படையினர் பலூஜா நகருக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்போவதில்லை என அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு நகருக்குள் நுழைந்தால் நரகத்திற்கான பாதை அமைக்கப்படுமென அகமட் அல் குமனி என்பவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கின் மக்கள் அமெரிக்கர்களை எந்த அளவுக்கு வெறுக்கிறார்கள் என்பது இந்தப் படுகொலைகள்மூலம் தெரிவதாக ஈராக்கிய பிரஜை ஒருவர் தெரிவித்தார்.



இதேவேளை ஈராக்கில் பணிபுரியும் அமெரிக்கப் படையினர் மத்தியில் இந்தச் சம்பவத்தின்பின்னர் ஆத்திர உணர்வு மேலோங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஈராக்கில் போராடும் உத்திகளை மாற்ற வேண்டியுள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க தொலைக்காட்சிகளில் இந்தச் சம்பவம் ஒளிபரப்பப்பட்டபோதிலும், உடல்கள் எரியூட்டித் துண்டாடப்பட்ட காட்சிகள் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக நோக்கு

## இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீன இளைஞர் படுகொலை



(டெல்அவிவ்)

…பா அகதிமுகாமில் 19 வயதுள்ள பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய படையினர் வீட்டுக்கூரை ஒன்றிலிருந்து இந்தத் தாக்குதலை குறிபார்த்துச் சுடும துப்பாக்கிகள்மூலம் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் போராளிகளுக்கும், இஸ்ரேலிய படையினருக்கும் இடையே தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

எகிப்திலிருந்து சுரங்கங்கள் மூலமாகக் கடத்தப்படும் ஆயுதங்களைத் தடைசெய்வதற்காகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய படையினர் ஏ.எப்.பி. செய்திஸ்தாபனத்திற்குத் தெரிவித்தனர்.

பலஸ்தீனர்களுக்குச் சொந்தமாக பல வீடுகளையும் இஸ்ரேல் - தீவிரவாதத்துடன் சம்பந்தப்பட்டவை எனத் தெரிவித்து அழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பி.பி.ஸி செய்திச் சேவைக்கு புதிய தலைவர் நியமனம்!



(லண்டன்)

இங்கிலாந்தின் ரேடியோ அலைவரிசை ஒன்றில் கடமைபுரிந்த மைக்கேல் கிரேட் பி.பி.சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானிய விஞ்ஞானி டேவிட் ஹெலியின் மரணம் தொடர்பாக நடத்தப்படும் கற்றன் அறிக்கை தொடர்பான பிரச்சினைகளில முன்னாள் பி.பி.சியின் தலைவர் கெயின் டேவிட் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். 61 வயதுடைய கிரேட் அதிகளவிலான ஊடகங்களில் பணிபுரிந்த அனுபவங்களைக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்குக்கரைப் பிரதேசத்தில் இஸ்ரேல் படையினருடன் யூதக் குடியிருப்பாளர் மோதல்




இஸ்ரேலியப் படையினருக்கும், மேற்குக் கரைப்பிரதேசத்தில் அமைந்துள்ள யூதக்குடியிருப்பாளர்களுக்கும் இடையே மோதல்கள் நிகழ்ந்துள்ளன. கேபுரோன் நகருக்கு அருகில் அமைந்திருந்த சட்டவிரோத குடியிருப்புக்களை இஸ்ரேலிய படைகள் அகற்ற முற்பட்ட வேளையில் இச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. யூதக்குடியிருப்பாளர்கள் வீடுகளை மீண்டும் அமைப்பதற்கு முற்பட்டவேளையில் 14 குடியிருப்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு சமாதானத்திற்கு அமெரிக்க அரசினால் தயாரிக்கப்பட்ட பாதை வரைபில் சட்டவிரோத குடியேற்றங்களை அகற்றுவதும் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய, பலஸ்தீன அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கான உரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். அமெரிக்க குழுவில் மத்திய கிழக்கிற்கான சிறப்புத் தூதுவர் வில்லியம் பேண்ஷ், வெள்ளை மாளிகை அதிகாரி எலியட் அப்ராமும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுக்களின் விபரங்கள் வெளிவிடப்படாதபோதிலும், இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் காஸா பிரதேசத்திலிருந்து விலகிக்கொள்வதற்கு அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் முடிவடைந்ததும் பலஸ்தீன பிரதமர் அகமர் கூரே தனது கருத்தில் - இஸ்ரேலியப் படைகளும், யூதக்குடியிருப்பாளர்களும் காஸாப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவது பேச்சுக்களின் முதல்கட்டமாக அமையவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் காஸாவிலிருந்து துருப்புக்களும், குடியேற்றக்காரர்களும் வெளியேறும் சமரசப் பேச்சுக்கள் பங்குகொள்ள விரும்புவதாக பிரதமர் கூரே தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் ஏப்ரல் 14 இல் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்திக்கும்போது காஸாவிலிருந்து வெளியேறுவது தொடர்பான திட்டங்கள் வெளியிடப்படும் என பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

## பொலிவிய அரசாங்கம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மாற்றத்தை மேற்கொண்டுள்ளது

பொலிவியாவில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுரங்கத் தொழிலாளி ஒருவரின் தற்கொலையின் பின்னரே இந்தமுடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலையற்றிருந்த சுரங்கத் தொழிலாளி ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிபொருட்கள்மூலம் தன்னை வெடித்துச் சிதற வைத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னரே பொலிவிய ஜனாதிபதி கார்லொஷ் மெசா ஓய்வூதியத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களைத் தெரிவித்தார். இதன்மூலம் கூடுதலான மக்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின்மூலம் 1000 டொலர்கள் ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். கடந்த ஒக்ரோபர் மாதம் விவசாயிகள், வேலையாட்கள், சுரங்கத் தொழிலாளிகள் எதிர்ப்பு ஊர்வலங்களை மேற்கொண்டிருந்தனர்.

பொலிவியாவில் 30000 வேலையற்றவர்கள் ஓய்வூதியம் எவையும் வழங்கப்படாதுள்ளனர்.

பொலிவியாவில் பல ஆயிரக்கணக்கான வேலையற்ற சுரங்கத் தொழிலாளிகள் போதிய நிதி இல்லாத காரணத்தினால் ஓய்வூதியம் எவையும் கொடுக்கப்படவில்லை.

பலமுறை இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். இதன்பின்னர் ஜனாதிபதி கொன்சாலோ சான்செஷ் பதவியிலிருந்து விலகிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland


# யாழ்ப்பாணத்தில்....

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 80 வீத வாக்குகளை தமிழரசுக்கட்சி பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இருப்பதாகவும், இதன்மூலம் யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஒன்பது தேர்தல் தொகுதிகளில் எட்டு ஆசனங்கள் இக்கட்சி பெறுவது உறுதியாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாக்குகள் வீதம் அடுத்த சுற்றில் அதிகரிக்குமானால் ஒன்பது ஆசனங்களையும் தமிழரசுக்கட்சி பெறக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாக இன்று அதிகாலைகிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# யாழ்.குடாநாட்டில்...

நண்பகலுடன் மூடப்பட்டு வீதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதமடைந்ததால் வாக்களிப்பு நிலையங்கள் தவிர்ந்த பகுதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது.

இதேவேளை, இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக பஸசேவைகள் நடத்தப்பட்டன. எனினும் இடம்பெயர்ந்தவர்களில் குறைந்தளவானோரே தமது வாக்குகளைச் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐம்பது வீதமான வாக்காளர்கள்...

6 இலட்சத்து 44 ஆயிரத்து 279 வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த போதிலும் இவற்றில் 50 வீதமான வாக்களர்களே வாக்களித்ததாக யாழ். தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. இவற்றில் தொகுதியாக வெளியிடப்பட்ட விபரங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் 35.2 வீதமும், சாவகச்சேரியில் 59.5 வீதமும் பருத்தித்துறை 44.5 வீதமும், உடுப்பிட்டியில் 44.5 வீதமும், கோப்பாயில் 49.5 வீதமும், மானிப்பாயில் 43.6 வீதமும், காங்கேசன்துறையில் 33.7 வீதமும், நல்லூரில் 35 வீதமும், வட்டுக்கோட்டையில் 44.5 வீதமும், கிளிநொச்சியில் 52 வீதமும், ஊர்காவற்துறையில் 37.2வீதமானவர்களும் வாக்களித்துள்ளனர்.

மாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்ததும் பொலிஸாரின் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள் யாழ்.செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டன. வாக்குப் பெட்டிகளுக்கு வீதிகளில் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கினர்.

வாக்களிப்பு நிலையங்களிலிருந்து மாலை 5 மணிக்கு வாக்குப் பெட்டிகள் வரத்தொடங்கியபோதிலும், நேற்றிரவு 7.55 மணிவரை 7 ஆயிரத்து 95 வாக்குப்பெட்டிகள் வந்தடைந்தன. இவற்றில் முகமாலையில் அமைக்கப்பட்டிருந்த கிளிநொச்சிக்கான கொத்தணி வாக்களிப்பு நிலையத்திலிருந்து 88 வாக்களிப்பு பெட்டிகளும் அடங்குகின்றன.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 31 வீதமான வாக்காளரே வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தினர். இவர்களைவிட இம்முறை வாக்களித்தவர்களில் 19 வீதமான வாக்காளர்கள் அதிகமாக வாக்களித்திருந்தனர்.

# புலிகளின்கட்டுப்பாட்டு மக்கள்...

கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் வாக்களிப்பதற்காக முகமாலை சோதனைச் சாவடிகளில் 61 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் சுமார் 63 ஆயிரத்து 700 வாக்களர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் 60 வீதமானவர்களே வாக்களித்ததாகவும் -

இதேவேளை வன்னிமாவட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள வாக்களிப்பதற்கு வசதியாக ஓமந்தையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடிக்கு அருகில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பேரூந்துகளில் ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மக்கள் மிகவும் உற்சாகத்துடன் வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தைப் பகுதியில் உள்ள கொத்தணி வாக்குச்சாவடிகளில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில், 70 வீதமான வாக்களிப்பு இடம்பெற்றதாக, வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கே.கணேஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக உயிலங்குளம் வண்ணாமோட்டை, மடுச்சந்தியிலும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. இங்கும் பெருமளவான வாக்காளர்கள் வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக, வவுணதீவில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டதாகவும், இங்கு பெருமளவான வாக்காளர்கள் வாக்களித்ததாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர் புண்ணியமூர்த்தி தெரிவித்தார். இங்கு 74 சதவீதமான வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக, கட்டைபறிச்சான் பகுதியில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.

இங்கும் பெருமளவான வாக்காளர்கள் வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# தபால்மூலவாக்கு முடிவுகள்

## யாழ்ப்பாண மாவட்டம்

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 3175 | 80.46% |
| ஈ.பி.டி.பி | 420 | 10.46% |
| சுயேட்சை (1) | 340 | 8.62% |
| புதிய இடதுசாரி முன்னணி | 7 | 0.18% |
| ஜாதிக ஹெல உறுமய | 1 | 0.03% |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1 | 0.03% |
| சுவராஜ்ய | 1 | 0.03% |
| ஐ.சோ.க | 0 | |
| றுகுணு ஜனதா | 0 | |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | **3946** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **39** | |
| **மொத்த வாக்குகள்** | **3985** | |

## இரத்தினபுரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 4886 | 58.6% |
| ஐக்கியதேசியக் கட்சி | 2839 | 34.1% |
| ஜாதிக ஹெல உறுமய | 582 | 7.0% |
| புதிய இடதுசாரி முன்னணி | 14 | 0.2% |
| ஐ.ல.முன்னணி | 2 | |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 2 | |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 2 | |
| சுவராஜ்யக் கட்சி | 2 | |
| சுயேட்சைக்குழு (3) | 1 | |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 1 | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 1 | |
| சிங்கள மகா சம்பத பூமிபுத்திரகட்சி | 1 | |
| **அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்** | **8463** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **132** | |
| **செல்லுபடியான வாக்குகள்** | **8331** | |

## அம்பாந்தோட்டை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 5669 | 67.1% |
| ஐ.தே.க | 2743 | 32.5% |
| பூமிபுத்திரக் கட்சி | 16 | 0.2% |
| புதிய இடதுசாரி முன்னணி | 7 | 0.1% |
| ஐ.ல.முன்னணி | 6 | 0.1% |
| இ.தே.மு. | 2 | |
| சுயேட்சை (2) | 2 | |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 1 | |
| சுயேட்சை (3) | 1 | |
| சுயேட்சை (8) | 1 | |
| சுயேட்சை (1) | 1 | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 1 | |
| தே.அ.முன்னணி | 1 | |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | **8588** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **137** | |
| **செல்லுபடியான வாக்குகள்** | **8451** | |

## மொனராகலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு. முன்னணி | 4667 | 63.2% |
| ஐ.தே.க | 2521 | 34.1% |
| ஜாதிக ஹெல உறுமய | 178 | 2.4% |
| புதிய இடதுசாரிமுன்னணி | 3 | |
| ஐ.ல.முன்னணி | 3 | |
| சிறிலங்கா தேசிய முன்னணி | 3 | |
| சிறிலங்கா முற்போக்கு முன்னணி | 2 | |
| றுகுணு ஜனதா பக்ஷய | 2 | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 2 | |
| சுயேட்சைக்குழு (5) | 1 | |
| சுயேட்சைக்குழு (1) | 1 | |
| ஜாதிக சங்வர்த்தன பெரமுன | 1 | |
| சிங்கள மஹாசம்பத பூமிபுத்திர பக்ஷய | 1 | |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | **7508** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **123** | |
| **செல்லுபடியான வாக்குகள்** | **7385** | |

## பதுளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 9025 | 59.24% |
| ஐ.தே.க | 5523 | 36.25% |
| ஜாதிக ஹெல உறுமய | 654 | 4.29% |
| தே.அ.முன்னணி | 10 | 0.07% |
| புதிய இடதுசாரி முன்னனி | 6 | 0.04% |
| றுகுணு ஜனதா கட்சி | 6 | 0.04% |
| பூமிபுத்திர கட்சி | 4 | 0.03% |
| ஐ.ல.முன்னணி | 3 | 0.02% |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | **15234** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **286** | |
| **மொத்த வாக்குகள்** | **15520** | |

## புத்தளம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 3564 | 54.16% |
| ஐ.தே.க | 2559 | 38.88% |
| ஹெல உறுமய | 440 | 6.69% |
| தே.அ.முன்னணி | 5 | 0.08% |
| புதிய இடதுசாரி முன்னணி | 4 | 0.06% |
| ஐ.மு .ம.மு | 2 | 0.03% |
| சுயேட்சைக்குழு (2) | 1 | 0.02% |
| சுயேட்சைக்குழு (9) | 1 | 0.02% |
| சுயேட்சைக்குழு (11) | 1 | 0.02% |
| இ.தே.மு | 1 | 0.02% |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | | **6581** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **139** |
| **மொத்த வாக்குகள்** | | **6720** |

## திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 3362 | 40.47% |
| தமிழரசுக் கட்சி | 1892 | 22.77% |
| ஐ.தே.க | 1463 | 17.61% |
| முஸ்லிம் காங்கிரஸ் | 1450 | 17.45% |
| ஜாதிக ஹெல உறுமய | 88 | 1.06% |
| ஈ.பி.டி.பி | 37 | 0.45% |
| புதிய இடதுசாரி முன்னணி | 8 | 0.10% |
| சுயேட்சைக்குழு (1) | 2 | 0.02% |
| சுயேட்சைக்குழு (6) | 2 | 0.02% |
| ஐ.மு.ம.மு | 2 | 0.02% |
| சுயேட்சைக்குழு (3) | 1 | 0.01% |
| பூமிபுத்திர | 1 | 0.01% |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **8308** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **273** |
| **மொத்த வாக்குகள்** | | **8581** |

## வன்னி மாவட்டம்

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 1942 | 48.01% |
| ஐ.ம.சு.முன்னணி | 1132 | 27.99% |
| ஐ.தே.க | 799 | 19.75% |
| ஐ.ம.வி.முன்னணி | 104 | 2.57% |
| ஈ.பி.டி.பி | 52 | 1.29% |
| ஹெல உறுமய | 10 | 0.25% |
| புதிய இடதுசாரி முன்னணி | 3 | 0.07% |
| சுயேட்சைக்குழு (9) | 1 | 0.02% |
| பூமிபுத்திர கட்சி | 1 | 0.02% |
| ஐ.சோ.க | 1 | 0.02% |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **4045** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **198** |
| **மொத்த வாக்குகள்** | | **4243** |

## மாத்தறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 8201 | 64.69% |
| ஐ.தே.க | 3665 | 28.91% |
| ஹெல உறுமய | 788 | 6.22% |
| தே.அ.முன்னணி | 9 | 0.07% |
| ஐ.சோ.க | 6 | 0.05% |
| புதிய இடதுசாரி முன்னணி | 4 | 0.03% |
| சுயேட்சைக்குழு (3) | 1 | 0.01% |
| சுயேட்சைக்குழு (4) | 1 | 0.01% |
| சுயேட்சைக்குழு (7) | 1 | 0.01% |
| லிபரல் கட்சி | 1 | 0.01% |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **12677** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **207** |
| **மொத்த வாக்குகள்** | | **12884** |

## கேகாலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 8894 | 58.20% |
| ஐ.தே.க | 5502 | 36% |
| ஹெல உறுமய | 858 | 5.61% |
| புதிய இடதுசாரி முன்னணி | 9 | 0.06% |
| பூமிபுத்திர கட்சி | 6 | 0.04% |
| தே.அ.முன்னணி | 4 | 0.03% |
| ஐ.சோ.க | 3 | 0.02% |
| சி.ல.மு.க | 2 | 0.01% |
| ஐ.மு.ம.மு | 2 | 0.01% |
| சுயேட்சைக்குழு (8) | 1 | 0.01% |
| இ.மு.முன்னணி | 1 | 0.01% |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **15282** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **329** |
| **மொத்த வாக்குகள்** | | **15611** |

## மாத்தளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 5093 | 58.94% |
| ஐ.தே.க | 3014 | 34.88% |
| ஹெல உறுமய | 512 | 5.93% |
| ஐ.சோ.க | 5 | 0.06% |
| தே.ம.க | 4 | 0.05% |
| தே.அ.முன்னணி | 3 | 0.03% |
| புதிய இடதுசாரி முன்னணி | 3 | 0.03% |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **8642** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **177** |
| **மொத்த வாக்குகள்** | | **8818** |

## அநுராதபுர மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 12536 | 60.70% |
| ஐ.தே.க | 7387 | 35.77% |
| ஹெல உறுமய | 664 | 3.22% |
| ஐ.சோ.க | 26 | 0.13% |
| தே.அ.முன்னணி | 17 | 0.08% |
| இடதுசாரி முன்னணி | 6 | 0.03% |
| சுயேட்சைக்குழு (4) | 3 | 0.01% |
| இ.தே.மு | 3 | 0.01% |
| சுயேட்சைக்குழு (2) | 2 | 0.01% |
| சுயேட்சைக்குழு (3) | 2 | 0.01% |
| சுயேட்சைக்குழு (5) | 2 | 0.01% |
| றுகுணு ஜனதா | 1 | |
| பூமிபுத்திர | 1 | |
| சுவராஜ்ய | 1 | |
| **அளிக்கப்பட்ட வாக்குகள்** | | **20651** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | **644** |
| **மொத்த வாக்குகள்** | | **21295** |


புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை



SHAN MULTY TRADE CENTRE

(அனைத்தும் ஒறிஜினல் JAPAN)



SONY, NATIONAL, T.V கள் (14", 19", 20", 21", 25", 29", 34") VIDEO DECK, SONY, TECHNICS, KENWOOD, PIONEER செற்றப் றேடியோக்கள், AMPLIFIERS, (PIONEER, KENWOOD, YAMAHA, DENON, SANSUI, MARANIZ), புறயெக்ரர் என்பனவும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

NO. 50, K.K.S. ROAD, JAFFNA. T.P. 222 7442

(சி/2398)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.